2/5057

செந்தமிழ்

தொகுதி XXXII Jan - Feb 1935

JL
031m211,N03cw.
N35.32.3
215057

608

22 JAN 1935

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௨] பவ ஹு தைமீ [பகுதி-௩.

Vol. XXXII. *January-February 1935* No. 3.

உள்ளுறை.

நியாயப்பிரவேச மணிமேகலை:—பத்திராசிரியர் ௫௭—௬௪

பரிசோதனத்தொடர்:— ஸ்ரீமத். T. N. அப்பனையங்கார் ௬௫—௭௨

கம்பராமாயண இன்கவித்திரட்டு:— ,, ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B. V.C. ௭௩—௭௬

சித்தசுத்தி:— ,, V. S. ராமஸ்வாமிசாஸ்திரிகள் B.A., B.L. ௭௭—௮0

தண்ணீரும் எண்ணெயும்:— ,, நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர் ௮௧—௮௬

மதிப்புரை:— ௮௭—௮௮

கலைசைக்கோவை:— (குறிப்புரையுடன்) ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய — தாக்ஷிணாத்ய கலாநிதி Dr. உ. வே. சாமிநாதையர் 97–112

பெருந்தொகை முதற்குறிப்பகராதி: ,, மு. இராகவையங்கார். XIX-XXVI

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0

1934.

...imathu R. Shanmuga Rajeswara ... Sethupathy Avergal. and ... Thiru. Narayana Iyengar at the ...er Press, No. 54, New Jail Road, Madura.

உ

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் - முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாபறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

22 JAN 1935
7

உ
கடவுள் துணை.
செந்தமிழ்.

தொகுதி-௩௨] பவஹுல தைமீ [பகுதி-௩.
Vol. XXXII. January-February 1935. No. 3.

நியாயப்பிரவேச மணிமேகலை.

[௩௨—ஆம் பக்கத் தொடர்ச்சி.]

சபக்ஷவிபக்ஷ நிரூபணம்

நியாயப்பிரவேசம்

6 𑌕𑌃 𑌪𑍁𑌨𑌃 𑌸𑌪𑌕𑍍𑌷𑌃? 𑌕𑍋 𑌵𑌾 𑌵𑌿𑌪𑌕𑍍𑌷𑌃? 𑌇𑌤𑌿।

இதன் பொருள்: சபக்கம் யாது? விபக்கம் யாது? என்பது.

சபக்ஷம்.

நியாயப்பிரவேசத்தில் சபக்கவிலக்கணம் வருமாறு:—

7 𑌸𑌾𑌧𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑍇𑌨 𑌸𑌮𑌾𑌨𑍋𑌽𑌰𑍍𑌥𑌃 𑌸𑌪𑌕𑍍𑌷𑌃।

இதன் பொருள்: சாத்தியதருமமுடைமையால் ஒப்புமையுடைய பொருள் சபக்கம் என்பதாம். சாத்தியதர்மம் - துணிபொருள்.

மணிமேகலையில் இது வருமாறு:—

....சபக்கம்,
சாதிக் கிற்பொருள் தன்னாற் பக்கத்
தோதிய பொதுவகை ஒன்றி யிருத்தல். (௧௨௪-௧௨௬)

இதன் பொருள்: சபக்கம் சாதிக்கில் - சபக்க இலக்கணம் தெளிவிக்குமிடத்து. பொருள்தன்னால் - சாத்தியதருமத்தாலே. பக்கத்து

ஓதிய பொதுவகை - பக்கவசனத்தாற்சொல்லப்பட்ட பொருட்பொதுத் தன்மையினால். (அஃதாவது துணிபொருளுடைமையால் என்றபடி.) ஒன்றியிருத்தல் - ஒப்புமையுடையதாயிருத்தல் என்பதாம்.

(இது பொருள்பற்றிச்சொல்லிய இலக்கணம்.)

நியாயப்பிரவேசத்தில் இதன் உதாரணம் வருமாறு:—

8 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾। 𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑍇 𑌶𑌬𑍍𑌦𑍇 𑌸𑌾𑌧𑍍𑌯𑍇 𑌘𑌟𑌾𑌦𑌿𑌰𑌨𑌿𑌤𑍍𑌯𑌃
𑌸𑌪𑌕𑍍𑌷𑌃।

இதன் பொருள்: அஃதெங்ஙனமெனில் சத்தத்தின்கண் அநித்தியமாதல் சாத்தியமானால், அநித்தியத்தன்மையுடைய குடமுதலியன சபக்கம். என்பதாம்.

மணிமேகலையில் இது வருமாறு:—

சத்த வநித்தியம் சாத்திய மாயின்
ஒத்தவ நித்தம் கடாதி போல் எனல். (கஉஎ-கஉஅ.)

இதன் பொருள்: சத்தவநித்தியம் சாத்தியமாயின் - சத்தத்தில் அநித்தியத்தன்மை துணியப்படுமானால். ஒத்த - எதிரியால் ஒத்துக்கொள்ளப்பட்ட. அநித்தம் — அநித்தியப்பொருளாகிய. கடாதிபோலெனல் - குடமுதலியனபோல் என்று கூறுதல் உதாரணம் என்பது.

விபக்ஷம்.

இனி நியாயப்பிரவேசத்தில் விபக்கவிலக்கணம் வருமாறு:—

9 𑌵𑌿𑌪𑌕𑍍𑌷𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌸𑌾𑌧𑍍𑌯𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿।

இதன் பொருள்: எதன்கண் சாத்தியப்பொருளில்லையோ அது விபக்கம் என்பது.

இந்த விபக்கவிலக்கணப்பகுதி மணிமேகலையில் இல்லை.

நியாயப்பிரவேசத்தில் விபக்கவுதாரணம் வருமாறு:—

10 𑌯𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑌦𑌕𑍃𑌤𑌕𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌯𑌥𑌾𑌽𑌕𑌾𑌶𑌮𑌿𑌤𑌿।

இதன் பொருள்: யாதொன்று நித்தியப்பொருளோ அது பண்ணப்படாததாகக் காணப்பட்டது; ஆகாசம்போல் என்பது.

மணிமேகலையில் இது வருமாறு:—

விபக்கம் விளம்பில் யாதொன் றியாதொன்று
அநித்த மல்லாதது பண்ணப் படாதது
ஆஅ காசம் போலென் றுரும். (கஉகூ-கநக)

இதன்பொருள் வெளிப்படை. இது உதாரணம். முன் சபக்கத்துக்கு இலக்கணம் சொல்லப்பட்டதுபோல் இங்கு விபக்கத்துக்கும் இலக்கணம் சொல்லப்பட்டிருக்கவேண்டும். அது காணப்படவில்லை.

நியாயப்பிரவேசத்தில் ஏதுவிலக்கணம் ஒருதாரணத்திற் பொருத்திக்காட்டப்படுகிறது. அது வருமாறு:—

11 𑌤𑌤𑍍𑌰 𑌕𑍃𑌤𑌕𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑍀𑌯𑌕𑌤𑍍𑌵𑌂 𑌵𑌾
𑌸𑌪𑌕𑍍𑌷 𑌏𑌵𑌾𑌸𑍍𑌤𑌿, 𑌵𑌿𑌪𑌕𑍍𑌷𑍇 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵;
𑌇𑌤𑍍𑌯𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑍌 𑌹𑍇𑌤𑍁𑌃।

இதன் பொருள்: இங்குக்காட்டிய வுதாரணத்துள் பண்ணப்படுதல் அல்லது முயற்சியாற்பிறத்தல் இவற்றுள் ஏதேனும் ஒன்று ஏதுவாகி, சபக்கத்தில்மட்டும் உள்ளதாயும், விபக்கத்தில் இல்லாததாயுமிருத்தலால் அநித்தியத்தன்மை முதலிய துணிபொருளைத் துணிதற்கு ஏதுவாயிற்றென்பதாம்.

இது முற்கூறிய இலக்கணங்களையுடைய சபக்க விபக்கங்களைப் பற்றி ஏதுவின் இலக்கணத்தைப் பொருத்திக்காட்டியவாறு.

இது மணிமேகலையில் வருமாறு:—

பண்ணப் படுதலும் செயலிடைத் தோன்றலும்
நண்ணிய பக்கம் சபக்கத் திலுமாய்
விபக்கத் தின்றி யநித்தத் திலுக்கு
மிகத்தகு மேதுவாய் விளங்கிற் றென்க. (கநஉ-கநரு)

இதன்பொருள் வெளிப்படை. இதனால், முன்பு ஏதுவிலக்கணம் 'பக்கத்துள்நிற்றலும்' 'சபக்கத்துண்டாதலும்' 'விபக்கத்தின்றியே விடுதலும்' என்று சொல்லப்பட்டிருப்பதை நினைப்பூட்டிக்கொண்டு எடுத்துக்கொண்ட உதாரணத்தை முடித்துக்காட்டியவாறு.

இதனுள், பண்ணப்படுதலும் செயலிடைத்தோன்றலும் என்றது பண்ணப்படுதலேனும், செயலிடைத்தோன்றலேனும் ஒன்றென்றவாறு.

பண்ணப்படுதல் அல்லது செயலிடைத்தோன்றல் என்று விகற்பித்தது, 'சத்தம் புதிதாக அப்போதப்போது உண்டுபண்ணப்படும் காரியப்பொருள்' என்று ஒருசாராரும், 'சத்தம் நித்தமாய்நின்றே பொருள்கள் தொழிற்படுங்கால் தானேதோன்றிமறைவது' என்று மற்றொரு சாராரும் கொள்ளும் கொள்கைவேறுபாடுபற்றிச் சொல்லியபடி.

திருஷ்டாந்தம்.

இனி நியாயப்பிரவேசத்தில் திருட்டாந்தப்பகுப்பு வருமாறு:—

12 த்ருஷ்டாந்தோ த்விவித:। ஸாதர்ம்யேண
வைதர்ம்யேண ச।

இதன்பொருள்: திருட்டாந்தம் சாதருமியத்தாலும் வைதருமியத்தாலும் இரண்டுவகைப்படும் என்பதாம்.

மணிமேகலையினும்,

ஏதமில் திருட்டாந் தம்இரு வகைய;
சாதரு மியம்வை தருமி யம்மென (கூ௯-கூ௰)

என்று ஒருபடியே பகுக்கப்பட்டிருக்கிறது. இதனுள் 'ஏதமில்' என்னும் அடையால் திருட்டாந்தப்போலிகள் விலக்கப்பட்டன. நியாயப்பிரவேசத்தில் இவ்வாறு அடைகொடுத்துவிசேடிக்கப்படாவிடினும் கருத்து இதுவேயாதலால் வேறுபாடில்லை.

சாதருமியம்

இனி நியாயப்பிரவேசத்தில் சாதருமிய திருட்டாந்தத்தின் இலக்கணம் வருமாறு:—

13 தத்ர ஸாதர்ம்யேண தாவத்। யத்ர ஹேதோ:
ஸபக்ஷ ஏவாஸ்தித்வம் க்யாப்யதே।

இதன் பொருள்: முற்கூறிய திருட்டாந்தங்களிரண்டினுள் சாதருமியத்தால்வரும் திருட்டாந்தமாவது, எங்கு ஏதுவிற்குச் சபக்கத்தின் மாத்திரம் உண்மை சொல்லப்படுகிறதோ அது என்பதாம்,

சாதருமியம்—பக்கத்தோடு சமானமான தருமமுடைமை; அதாவது சாத்திய தருமமுடைமை என்றவாறு.

இங்குக்கூறப்பட்ட சாதருமியதிருட்டாந்தத்தினிலக்கணம் மணிமேகலையிற் கூறப்படவில்லை.

நியாயப்பிரவேசத்தில் இதன் உதாரணம் வருமாறு:—

14 தத்யதா। யத்க்ருதகம் ததநித்யம் த்ருஷ்டம்
யதா கடாதிரிதி।

இதன் பொருள்: அஃதெங்ஙனம்? யாதொன்று செய்யப்பட்டது அது அநித்தமாகக் காணப்பட்டது, குடமுதலியனபோல் என்பதாம்.

'யாதொன்று செய்யப்பட்டது அது அநித்தமாகக் காணப்பட்டது' என்றது திருட்டாந்தவசனத்துக்கு உறுப்பாயுள்ள வியாத்திவசநம் கூறியவாறு.

'குடமுதலியனபோல்' என்றது திருட்டாந்தவசனம் கூறியவாறு.

மணிமேகலையில் இது வருமாறு:—

சாதன் மியமெனப் படுவது தானே
அநித்தங் கடாதி யந்நுவயத் தென்கை. (கூ௮-கூக)

இதனால் பெயரும் உதாரணமும் சொல்லப்பட்டன. இவ்விரண்டடிகளுக்குமுன்பு இலக்கணம்சொல்லும் அடிகள் விடப்பட்டிருக்கவேண்டும், அல்லது இதன் முதனூலினுள்ளபடி இதுவாயிருக்கவேண்டும்.

இங்கு, அந்நுவயத்து என்றது அந்நுவயத்தோடு என்றபடி. அதாவது எடுத்துக்கொண்ட அநுமானத்துக்கு 'யாது யாது செய்யப்பட்டது அது அது அநித்தம்' என்ற அந்நுவயவியாத்தி வசனத்

துடன், குடமுதலியன அநித்தமாதலால் அதுபோலும்என்று சொல்லு தல் சாதருமியதிருட்டாந்தம் என்றபடி. அந்நுவயமாவது ஏதுவுள்ள இடங்களிலெல்லாம் துணிபொருளும் உள்ளதாதல்; ஈண்டு அதனை யுணர்த்தும் வாக்கியம் அந்நுவயமெனப்பட்டது.

அந்நுவயத்தோடு அநித்தம் கடாதி என்கை எனக் கூட்டுக.

அநித்தம் கடாதி என்கை என்றது அநித்தமாகிய கடாதிபோல் என்று சொல்லுகை என்றவாறு. போலென்றது எஞ்சிநின்றது.

வைதருமியம்.

இனி நியாயப்பிரவேசத்தில் வைதருமியதிருட்டாந்தத்தினிலக்கணம் வருமாறு:—

15 ஒவெயஒ8-ஂரூணா z வி। ய ஷு ஸாயூா z ஹாவெ
ஒஹஒ தாாஹாவஸவ கழூஒ த।

இதன்பொருள்: வைதருமியத்தால் வரும் திருட்டாந்தமாவது, எங்கு சாத்தியாபாவமிருக்குமிடத்தில் ஏதுவின் இன்மை சொல்லப் படுமோ அது என்பதாம்.

வைதருமியம் - பக்கத்தோடு பொருந்தாத தருமமுடைமை. அதா வது துணிபொருளின் இன்மையுடைமை.

மணிமேகலையிலும் இவ்வாறே,

> வைதன் மியதிட் டாந்தஞ் சாத்திய
> மெய்தா விடத்தி லேதுவு மின்மை. (கச0–கசக)

என்று வைதருமியதிருட்டாந்தத்தினிலக்கணம் கூறப்பட்டிருக்கிறது.

நியாயப்பிரவேசத்தில் இதன் உதாரணம் வருமாறு:—

16 தஷூயா। யஷி தூ௦ தஒகூ தக௦ ஓூஷ௦
யயஏா z காஶஜி தி।

இதன் பொருள்: அஃதெங்ஙனம்? யாதொன்று நித்தியப்பொருளோ அது செய்யப்படாததாகக் காணப்பட்டது, ஆகாயம்போல என்பதாம்.

இவ்வுதாரணப்பகுதி மணிமேகலையிற் காணப்படவில்லை.

> வைதன் மியதிட் டாந்தஞ் சாத்திய
> மெய்தா விடத்தி லேதுவு மின்மை. (கசW–கசக)

என்ற இலக்கணவாக்கியத்தை யடுத்திருக்கவேண்டிய உதாரணவாக்கியங்க ளடங்கிய அடிகள் மணிமேகலையில் தவறி விடப்பட்டிருக்கவேண்டும், அல்லது அதன் முதனூலிலும் இல்லாதிருக்கவேண்டும்.

மணிமேகலையில் இல்லாதன.

இதன்மேல் நியாயப்பிரவேசத்தில், மணிமேகலையிற் சொல்லப் படாத பொருளடங்கிய பகுதியொன்றுள்ளது. அது வருமாறு:—

17 நி தூஶஔ நா z ஷு ஊநி தூக்ஷூா z ஹாவ உ வூஒ த।
ஊகூ தகஶஔ நா z வி கூ தகக்ஷஸூா z ஹாவ$।
யஏா ஹாவா z ஹாவொ z ஹாவ ஊ தி।

இதன் பொருள்: நித்தியம் என்ற சொல்லால் இங்கு அநித்தியத் தன்மையின் இன்மை சொல்லப்படுகிறது; பண்ணப்படாததென்ற சொல்லாலும் பண்ணப்படுதலின் இன்மை சொல்லப்படுகிறது; எங்ஙனமெனில், உண்மையின் இன்மை இன்மையாவதுபோல இன்மையின் இன்மையும் இன்மையென்றே சொல்லத்தக்கதென்க என்பதாம்.

இதனால் நித்தியத்தன்மை, பண்ணப்படாமை என்னும் இவை, முறையே அநித்தியத்தன்மையின் இன்மையும், பண்ணப்படுதலின் இன்மையுமாகிய அபாவப்பொருளேயாதலால் அங்ஙனம் வழங்குதல் "எல்லாப் பொருளும் அநித்தம்" எனக்கொள்ளும் புத்தமதக்கோட் பாட்டுக்கு மாறுபாடில்லை எனக் காட்டியவாறாயிற்று.

இப்பகுதி மணிமேகலையிற் சொல்லப்படாமல் நியாயப்பிரவேசத் தில்மாத்திரம் சொல்லப்பட்டிருப்பதால், மணிமேகலை எழுதப்பட்ட பின்பு நியாயப்பிரவேசம் எழுதப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில், இங்குக்காட்டிய அநுமானவாக்கியங்களில் அவ்விரண்டு நூல்களிலும் 'சத்தம் நித்தம்' என்றற்றொடக்கத்து உதாரணங்களில் 'நித்தம்' என்ற சொல் வழங்கப்படுகிறது; எல்லாப்பொருளும் அநித்தமெனக்கொள்ளும்

புத்தமதத்தினருக்கு 'நித்தம்' என்று ஒருபொருளும் பிரசித்தமில்லாமையால் 'சத்தம் நித்தம்' என்று அவர்கள் வாயால் பேசுவதும் அப்பிரசித்தவிசேடணமென்னும் குற்றமாமே; அவர்கள் இந்நூலுள் 'நித்தம்' என்ற சொல்லை எங்ஙனம் வழங்கக்கூடும்? என்ற சங்கையுண்டாவதை நோக்கி, அநித்தியப்பொருள் தமக்குப் பிரசித்தமாகையால் அதன் இன்மைப்பொருளாகக் கருதிக் கூறலாமென்று சமாதானம் கூறியதுபோல் இருக்கிறது. இப்படியான சமாதானம் மணிமேகலையிலும் சொல்லியிருக்கவேண்டியது இன்றியமையாததாயிருந்தும் அது சொல்லப்படாதிருப்பதை நோக்கும்போது, இப்படியான சங்கை உண்டாவதற்கு முன்பு மணிமேகலை எழுதப்பட்டிருக்கலாமென்று தோன்றுகிறது. இன்மையின் இன்மை உண்மையாம் என்பது நியாயநூல்வழக்கு; இன்மையின் இன்மையும் இன்மையேயாம் என்பது புத்தமதவழக்கு.

இதன்மேல் நியாயப்பிரவேசத்தில்,

18 உக்தா: பக்ஷாதய:। என்று ஒருவாக்கிய முள்ளது.

இதன் பொருள்: பக்கம் ஏது திருட்டாந்தம் என்னும் சாதநங்கள் சொல்லப்பட்டன என்பதாம்.

மணிமேகலையில்,

"இத்திறம் நல்ல சாதனத் தொத்தன" (௧௪௨)

என்பதனால் சாதன இலக்கணங்கள் சொல்லிமுடிக்கப்பட்டன என்று சொல்லப்பட்டது.

இதனுள் இத்திறம் என்றது "வெளிப்பட்டுள்ள தன்மியினையும்" (௧௧௫) என்றுதொடங்கிச் சொல்லப்பட்ட பக்கம் ஏது திருட்டாந்தம் என்னும் உறுப்புக்களுக்கு உரைக்கப்பட்ட இயல்புகள்.

நல்லசாதனத்து ஒத்தன என்றது குற்றமற்றசாதனங்களாகிய பக்கம் ஏது திருட்டாந்தம் என்னும் உறுப்புக்களுள் பொருந்தியுள்ளன என்பதாம்.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

\\

பரிசோதனத் தொடர்.

(சொல்-இளம்பூரணம்.)

௪௦-ம் பக்கத்தொடர்ச்சி.

பரிசோதனம் 14. (வேற்றுமையியல் 10.) "இரண்டாகுவதே, ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி.........அன்ன பிறவு மம்முதற் பொருள, என்ன கிளவியு மதன்பால வென்மனார்" என்பது சூத்திரம். இஃது இரண்டாம்வேற்றுமையாமாறு கூறுகின்றது.

இரண்டாம் எண்ணுமுறைமைக்கண்ணது ஐ என்னும் பெயரையுடைய வேற்றுமைச்சொல்; அது யாண்டுவரினும் வினையும் வினைக்குறிப்பும் என அவ்விரண்டையும் தனக்குத் தோற்றுநிலமாகவுடைத்து; அவ் விரண்டும் நிமித்தமாகத் தோன்றுமெனினும் அமையும்: என்று உரையாசிரியர் இதற்குப் பொருள்கூறினர். 'மரத்தைக்குறைத்தான்' என்பது வினைபற்றிவந்தது; 'குழையையுடையன்' என்பது வினைக்குறிப்புப்பற்றிவந்தது: என்று அவர் வாலாறும் காட்டினர்.

பின்னரும் அவர் காப்புமுதற் சிதைப்பீறுகவுள்ள பொருட்பகுதியனைத்திற்கும் தனித்தனியே, 'வினையும் வினைக்குறிப்பும்பற்றி வருமாற்றுக்கு உதாரணப்பகுதி காட்டுதும்' என்று அவற்றை விரிவாக முடித்துக்காட்டியுள்ளார். இங்ஙனங்காட்டிய உதாரணங்களின்பின்னர், சூத்திரத்திலுள்ள 'அன்ன பிறவும்' என்பதற்கு விளக்கவுரைவரையுமிடத்து அச்சுப்புத்தகத்தில், "பிறவும் என்றது இவையல்ல பிறவும் என்றவாறு" என்று ஒருதனிவாக்கியமும் அதனையடுத்து வேறுபத்தியில், "வினையும் வினைக்குறிப்பும்பற்றிவருவனவெல்லாம் இரண்டாம்வேற்றுமைப்பொருள" என மற்றொரு தனிவாக்கியமும் காணப்படுகின்றன.

இங்கு, பிறவும் என்பது மிகமிக வெளிப்படைப்பொருளதாகையால், முதல்வாக்கியம் பயனின்றிநிற்கின்றது. அதனின் வேறுபத்தியாகப் பிரிந்துநிற்கும் இரண்டாம்வாக்கியமும், பொதுவாக வினையும் வினைக்குறிப்பும்பற்றி இரண்டாம்வேற்றுமை வரும் என்னுங் கருத்தையே விளக்குமாகலின், அது முன்னரே கூறிமுடிந்தமையாற் புனருத்தமாம்.

2

ஆகையால் இங்ஙனம் இடர்ப்படவேண்டாது, பழைய பிரதியில் இவ்விருவாக்கியமும் ஒருவாக்கியமாயெழுதப்பட்டிருக்கிறது. "பிறவும் என்றது இவையல்ல பிறவும் வினையும் வினைக்குறிப்பும்பற்றி வருவனவெல்லாம் இரண்டாம்வேற்றுமைப்பொருள" என்பது அப் பழஞ்சுவடியிற்கண்ட பாடமாகும்.

இரண்டாம்வேற்றுமை, வினையும் வினைக்குறிப்புமாகிய அவ்விருமுதலிற்றோன்றுதல் சூத்திரத்தில் எடுத்தோதப்பட்டவிளவிகட்கன்றி அன்னபிறவற்றிற்கும் உரிய சிறப்பியல்பென்பது இவ் விசேடவுரையாற் போதரும். ஆகலின் அச்சுப்பிரதியின் பாடத்தினும் பழம்பிரதியின் பாடமே சிறந்தது.

பரிசோதனம் 15. (வேற்றுமைமயங்கியல் 32.) "அவைதாம், தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவணலும், ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலும், அப்பண் பினவே நுவலுங்காலை" என்பது சூத்திரம். இஃது ஆகுபெயர்க்காவதோர் சிறப்பிலக்கணம் உணர்த்துகின்றது. ஆகுபெயர்கள் தத்தம் முதற்பொருட்கு இயைந்தவற்றுமேலனவும், இயையாதவற்றுமேலனவும் என இருவகைப்படும் என்பது கருத்து.

தேங்காய், கடுக்காய்; இவற்றை உணர்த்துங்கால் தெங்கு கடு என்பன தத்தம்பொருள்வயிற் றம்மொடுசிவணின என்றும், நீலநிறமுள்ள ஆடையை உணர்த்துங்கால் நீலமென்பது ஒப்பில்வழியாற் பிறிதுபொருள்சுட்டிற்றென்றும் உரையாசிரியர் குறித்தனர்.

இவ்வுரைப்பகுதி, அச்சுப்புத்தகத்திலில்லாத சில பாடவேறுபாட்டுடன் பழையபிரதியிற் காணப்படுகின்றது. "அவ்வாகுபெயர்கள் முதற்கண் ஆங்காலம், அம் முதற்கேயன்றி அம் முதலொடுதொடர்ந்த பொருண்மேல்நிற்றலும், முதற்கு எவ்வியைபுமில்லாதனமேல்நிற்றலும் என இரண்டிலக்கணம் உடைய என்றவாறு" என்பது அச்சுப்பதிப்பின் பாடம். பழைய பிரதியில் இவ்வாக்கியம், "அவ் வாகுபெயர்கள் முதற்கண் ஆங்கால் அம் முதற்குவேறன்றி அம் முதலொடுதொடர்ந்தபொருண்மேல்நிற்றலும், முதற்கு எவ்வியைபுமில்லாதனமேல் நிற்றலும் என இரண்டிலக்கணம் உடைய என்றவாறு" என்று மிகத் திருத்தமும் தெளிவுமுடையதாய் விளங்குகிறது.

இன்னும், இதனை அடுத்தபத்தியாக அச்சுப்புத்தகத்தில், "தத்தம் பொருண்மையிற் றம்மொடு சிவணல் தெங்கு, கடு என்னுந் தொடக்கத்தன: தெங்கு என்ற விடத்துத் தேங்கின்காய் எனல் கோள்க; கடுவும் அன்னதே:" என்றுள்ள வாக்கியம் பழையபிரதியில், "தத்தம் பொருள்வயிற் றம்மொடுசிவணின தெங்கு, கடு என்னும் தொடக்கத்தன: தெங்கு என்றவிடத்து, தேங்கின்வேறன்று தேங்கின்காய்; கடுவும் அன்னதே" என்று மிகத் திருத்தமும் தெளிவுமுடையதாய் விளங்குகிறது.

இவ்விரண்டிடத்தும் அச்சுப்பிரதியினும் பழம்பிரதியின்பாடமே பொருத்தமுடையதென்பது சூத்திரப்பொருளைச் சிறிது ஊன்றிநோக்குவார்க்கு நன்குபுலப்படும். ஆகையால் அப்பொருத்தத்தை இங்கு விரித்துரைப்பது மிகையென்று விடப்பட்டது.

பரிசோதனம் 16. (விளிமரபு 1.) "விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு, தெளியத் தோன்று மியற்கைய வென்ப" என்பது சூத்திரம். இதன்கருத்து, விளியென்று சொல்லப்படுவன தம்மை ஏற்கும் பெயருடனே விளங்கத்தோன்றும் தன்மைய என்பதாம்.

இதனுள் 'எனப்படுப' என்று பன்மைகூறியது, ஈறுதிரிதல் ஈற்றயனீடல் பிறிதுவந்தடைதல் இயல்பாதல் என விளி நான்குவகையாமென்பது விளக்கிற்று. 'கொள்ளும்பெயர்' என விதந்தது, விளியினைக் கொள்ளாப்பெயரும் உள என்பது விளக்கிற்று. 'தெளியத்தோன்றும்' என்று சிறப்பித்தது, விளி ஒரு வேற்றுமையன்றென்பாரை மறுத்து அதுவும் வேற்றுமையேயாதல் விளக்கிற்று. இவை இச்சூத்திரத்திற்கு இளம்பூரணர்கொண்ட பொருள்.

இதன்உரை "விளியென்பன தம்மையேற்கும்பொருளோடு யாப்புறத்தோன்றும் தன்மைய என்றவாறு" என்று அச்சிடப்பட்டிருக்கிறது. அதில் 'பொருளொடு' என்றிருப்பது 'பெயரோடு' என்று திருத்தப்படல்வேண்டும். இஃது ஒருபுறம்நிற்க.

இதனை அடுத்துள்ள விசேடவுரையின் தொடக்கத்தில், "தன்மைய என்றான், விளி பெயரொடுகொள்ளுமென்பதூஉம், கொள்ளுங்கால் ஏற்குமென்பதூஉம், பெயரொடுகொள்ளுமென்பதூஉம் சொல்லப்பட்டதாம்" என்ற வாக்கியம் அச்சுப்பிரதியிலும் பழையபிரதியிலும்

ஒருபடியாகவுள்ளது. இங்கு விளி பெயரொடு கொள்ளுமென இருமுறை மடித்துவருவது கூறியதுகூறற்குற்றமாம்.

இதனை உணர்ந்து, தொல்காப்பியச் சொல்லதிகாரக்குறிப்பில் (பக் 121.) இவ்வாக்கியத்தை எடுத்துக்காட்டி, "இங்கு இறுதியிலுள்ள 'பெயரொடுகொள்ளுமென்பதூஉம்' என்றது பொருந்தவில்லை:" என்று உரைக்கப்பட்டது. அங்கு அவ்வளவேயுரைத்து வேறுவகையில் அதற்குப் பொருந்துமாறு காட்டாமலும் விடப்பெற்றமையால், இறுதிப்பகுதி ஒன்றுநீங்க அவ்வாக்கியத்தின் எஞ்சியபகுதி இனிது பொருந்துமென்று கருத்துப்போலும்! ஆயினும் அங்ஙனமன்றி, 'கொள்ளுங்கால் ஏற்கு மென்பதூஉம்' என்ற இடைப்பகுதியிலும் தொடர்ப்பொருள் இனிதின் இயையுமாறில்லை.

பழஞ்சுவடியும் பிழையுற்றிருக்கும்நிலையில், உய்த்துணர்வு கொண்டே ஒருவாறு உண்மைப்பாடம் நிறுவல்வேண்டும். அங்ஙனம் உய்த்துணருமிடத்து இவ்வாக்கியத்தின் இடைப்பகுதியே வழூப்பட்டுள்ளதென்று தெரிகிறது. ஏனெனில் அதிலுள்ள 'என்பதூஉம்' என்னுஞ்சொல் ஒழியநிற்பின் அவ்வாக்கியப்பொருள் எளிதின் விளங்கிவிடும்.

அங்ஙனம் அஃது ஒழியநிற்குங்கால் அவ்வுரைவாக்கியம், "தன்மைய என்றான்; விளி பெயரொடுகொள்ளுமென்பதூஉம், கொள்ளுங்கால் ஏற்கும்பெயரொடுகொள்ளுமென்பதூஉம் சொல்லப்பட்டதாம்" எனத் திருத்தமும் தெளிவும் உடைத்தாகின்றது. 'விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு, தெளியத் தோன்றும் இயற்கைய' என்ற சூத்திரத்தின் உட்கருத்தை முதன்முதல் ஒருவகையாக விரித்துணர்த்தற்கு எழுந்தது இவ்வாக்கியமென்பது போதரும். ஆகையால் 'என்பதூஉம்' என்னுஞ்சொல் எழுத்தாளரால் இடையே பொருளுணர்ச்சியின்றிப் புகுத்தப்பட்டதுபோலும். மற்றைய வெளிப்படை. விரிக்கிற் பெருகும்.

பரிசோதனம் 17. (விளிமரபு 13.) "அவற்றுள், அன்னெனிறுதி யாவா கும்மே" என்பது சூத்திரம். இங்ஙனமுள்ள மூலபாடம் என்னுடைய பழையபிரதியிற் கண்டது. அச்சுப்பதிப்பில் இங்கு, 'அவற்றுள்' என்னுஞ்சொல் விடுபட்டிருக்கிறது.

"னரலள வென்னு மந்நான் கென்ப, புள்ளி யிறுதி விளிகொள் பெயரே" "ஏனைப் புள்ளி யீறுவிளி கொள்ளா" என்பவற்றின்பின் இது

தலைச்சூத்திரமாகையால், இங்கு முதற்கண் 'அவற்றுள்' என்பது இன்றியமையாமை வேண்டப்படும். சேனாவரையர் முதலான ஏனையுரையாளர் கொண்ட பாடமும் இதுவே. ஆகையால் அச்சுப்பிரதியின்பிழை திருத்திக்கொள்ளற்குரியதாம்.

பரிசோதனம் 18. (விளிமரபு 34.) "புள்ளியு முயிரு மிறுதி யாகிய, வஃறிணை மருங்கி னெல்லாப் பெயரும், விளிநிலை பெறாஉங் காலந் தோன்றிற், றெளிநிலை யுடைய வேகாரம் வரலே" என்பது சூத்திரம். இதன் உரை, புள்ளியீறும் உயிரீறுமாகிய அஃறிணைப்பெயரெல்லாம் விளி கொள்ளுங்காலந்தோன்றின் ஏகாரம்பெறுதலைத் தெற்றெனவுடைய என்பதாம். மரம், மரமே! நரி, நரியே! என்பனபோல்வன இதற்கு உதாரணம்.

இனி, இச்சூத்திரத்தில் ஏகாரம்பெறுதலைத் தெளிநிலையுடைய என்றதனால் பிறவாறும் விளியேற்பன உள என்பது பெறப்படும். இளம்பூரணர் இப்பொருளை விரித்தெழுதிய உரைப்பகுதியில், "தெளிநிலையுடைய என்று விதந்தோதினமையான் ஏகாரமொழியச் சிறுபான்மை இயல்பாய் விளியேற்பனவும் உள" என்ற வாக்கியம் அச்சுப்பிரதி, பழம்பிரதி ஆகிய இரண்டினும் ஒருபடியாகக் காணப்படுகின்றது.

ஆயினும் இதன்கீழ்க் காட்டப்பெற்ற உதாரணங்களை நோக்கவே இவ்வாக்கியம் சிறிது சீர்திருத்தம்பெறல்வேண்டுமென்று தோன்றும். 'வருந்தினை வாழியென் னெஞ்சம்' 'கருங்கால் வெண்குருகு' 'நெடுவெண் மதி' 'காட்டுச்சா ரோடுங் குறுமுயா அல்' 'ஒண்டேவி நாராய்' என அங்குக் குறித்த உதாரணங்கள் ஐந்தினுள் முன்னைய மூன்றும்* ஏகாரம் பெறாது இயல்பாய் விளியேற்றன என்றல் பொருந்தும். பின்னைய இரண்டும் ஏகாரம்பெறாது பிறவாறு விகாரமாயே விளியேற்றனவாம். என்னை? முயல், முயாஅல்! எனவும், நாரை, நாராய்! எனவும் விகாரமாயினவற்றை இயல்பென்றல் எவ்வாற்றானும் அமையாது.

---

* இம்மூன்றில் உயிரீற்று இயல்புவிளி ஒன்றற்கே, 'கருங்கால் வெண்குருகு' 'நெடுவெண்மதி' என இரண்டுதாரணங்காணப்படுவது ஆராய்தற்குரியது. 'கருங்கால் வெண்குரு கொன்று கேண்மதி' என ஆதியில் ஒன்றாகவே இருந்ததொரு மேற்கோள் இவ்வாறு சிதைந்து பிரிந்து இரண்டாக வேறுபட்டதோ என்று ஐயுறக்கிடக்கின்றது. சேனாவரையருரையில் இங்ஙனம் ஒரே எடுத்துக்காட்டாக உள்ளது.

ஆகையால் இவற்றின் முன்னுள்ள அவ்வுரைவாக்கியம், "தெளி நிலையுடைய என்று விதந்தோதினமையான் ஏகாரமொழியச் சிறுபான்மை இயல்பாயும் பிறவாறு விகாரமாயும் விளியேற்பனவும் உள" என்றிருத்தல்வேண்டுமென உய்த்துணரப்படும். ஏடெழுதினோர் பாரக்கினாலோ வேறுகாரணத்தினாலோ உண்மைப்பாடம் இடையே சிறிது சிதைந்திட்டதுபோலும்.

பரிசோதனம் 19. (பெயரியல் 2,) "பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலும், சொல்லி னாகு மென்மனார் புலவர்" என்பது சூத்திரம். சொல் தன்னைத் தானே உணர்த்துந்தன்மையும் தன்னின் வேறாய பொருளையுணர்த்துந்தன்மையும் என இருதன்மையும் ஒருங்குடைத்து என்பது இதன் கருத்து.

இச்சூத்திரவுரை, "தன்னின் வேறாகிய பொருள் தெரியப்படுதலும் பொருள் அறியப்படாத சொல் தன்னையறியப்படுதலும் இரண்டும் சொல்லான் ஆம் என்று சொல்லுவர் புலவர்" என அச்சிடப்பட்டுள்ளது. இதனுள் 'பொருள் அறியப்படாத சொல்' என்று சில சொல்லை வரைந்துசுட்டுவதுபோற் றெரிவதால் இவ்வாக்கியம் பிழையுடையது. "எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே" என்பதால், பொருளறியப்படாத சொல் ஒன்றுமின்றென்று விளங்கும்.

ஒருசொல் தன் பொருளறியப்படுங்காற் றன்னையும் பொருளையும் அறிவிக்கும். பொருளறியப்படாதவிடத்து அச்சொல் தன்னைமட்டில் அறிவித்துநிற்கும். இஃது எல்லாச்சொற்கும் பொதுவாக இயைந்த இலக்கணம். இங்ஙனமன்றி, பொருளறியப்படாத சொல் என்று தனியாக வேறு உள்ளனவல்ல.

பொருளையறியப்படாத நிலைமையில் அச்சொல் தன்னைமட்டில் அறியப்படும் நிலைமையுடையதாம் என்பதே இளம்பூரணர்கருத்து. ஆகையால் அவ்வாக்கியத்தில், 'பொருளறியப்பாடத சோல் என்றிருப்பது 'பொருளறியப்படாது அச் சோல்' என்று திருத்தப்படுதல்வேண்டும். உரைபிரதிக்கண் இவ்வுதாரணத்தைச் சுட்டிய வாக்கியத்தானும் இவ்வுண்மை எளிதின் விளங்கும். சேனாவரையருரையும் இவ்விடத்து இவ்வாறேயுள்ளது.

இனி, இச்சூத்திரத்திற் சொல் என்றது பொதுவாக நால்வகைச் சொல்லையும் குறிக்கும். நால்வகைச் சொல்லும் பொருளுணர்த்துமாறும் தன்னையுணர்த்துமாறும் உரையில் வேறுவேறு உதாரணங்களால் விளக்கப்பட்டுள்ளன. அவற்றுள், சாத்தன் என்பது பெயர்ச்சொல் பொருளுணர்த்திற்று. வந்தான் என்பதில் வினைச்சொல் பொருளுணர்த்திற்று. பண்டு காடுமன் என்பதில் இடைச்சொல் பொருளுணர்த்திற்று; உறுகால் என்பதில் உரிச்சொல் பொருளுணர்த்திற்று: எனக் கொள்ள வேண்டும். இங்ஙனமன்றி, 'சாத்தன் வந்தான்' என்பதனை ஒருதொடர்ப்பட்ட வாக்கியம்போலக்கொண்டு மயங்கலாகாது. அது சாத்தன். வந்தான்; எனத் தனித்தனி பிரித்து அச்சிடற்குரியது. இவ்வாறே மேலும், நீயென்கிளவி—பெயர்ச்சொல் தன்னையுணர்த்திற்று; செய்தெனெச்சம்—வினைச்சொல் தன்னையுணர்த்திற்ற; தஞ்சக்கிளவி—இடைச்சொல் தன்னையுணர்த்திற்று; கடிபென்கிளவி—உரிச்சொல் தன்னையுணர்த்திற்று: எனக் கொள்ளத்தகும்.

பரிசோதனம் 20. (வினையியல் 19.) "ஒன்றன் படர்க்கை தறட வூர்ந்த, குன்றிய லுகரத் திறுதி யாகும்" என்பது சூத்திரம். இங்ஙனமுள்ள மூலபாடம பழையபிரதியிற் கண்டது. அச்சுப்பிரதியில் இது 'தடறவூர்ந்த' என்ற பிறழ்ச்சியுடன் காணப்படுகிறது.

'தொல்காப்பியச்சொல்லதிகாரக்குறிப்பு' என்னும் புத்தகத்தில் (பக். 143) இப்பிறழ்ச்சியைச் சுட்டி, "ஒன்றறி கிளவி தறட வூர்ந்த, குன்றிய லுகரத் திறுதி யாகும்" என்னுஞ் சூத்திரத்தையும், இச்சூத்திரவுரையில் உரையாசிரியர் கூறிய உதாரணங்களின் முறையையும் நோக்குங்கால், 'தறடவூர்ந்த' என்ற பாடமே உரையாசிரியர் கொண்டனர் என்பது என் கருத்து:" என்று அதன் ஆசிரியாவர்களால் உய்த்துணர்ந்துரைக்கப்பட்டது. ஆயினும் பழைய பிரதியில் இவ்வுண்மைப்பாடமே வெள்ளிடைவரையாய் விளங்கிக்கிடத்தல் இங்குக் குறிக்கத்தக்கதே.

இனி, ஒன்றன்படர்க்கைவினை தறடக்குற்றுகரவீற்ற என்பது இச்சூத்திரத்தின் பொருள். உண்டது, உண்ணாநின்றது, உண்பது; கூயிற்று; குறுந்தாட்டு: என்பன முறையே இவற்றிற்கு உதாரணம். சேனாவரையரும் கிளவியாக்கவுரையில், "கிடக்கைமுறையாற் கூறாது, தறடவெனச் சிறப்புமுறையாற் கூறினார்" என இம்முறைவைப்பிற்குப் பயன் ஓதியுள்ளார். இங்குக் கிடக்கைமுறை என்றது, நெடுங்கணக்கினுள் டகறவெனக்கிடந்த முறை. சிறப்புமுறை என்றது; தகாவுகரம்

மூன்றுகாலமும் வினைக்குறிப்பும்பற்றி வருதலும், றகரவுகரம் இறந்தகாலமும் வினைக்குறிப்பும்பற்றி வருதலும், டகரவுகரம் வினைக்குறிப்பே பற்றிவருதலும் ஆகிய வேற்றுமையானெய்தியது. 'தடற' என அச்சுப்பிரதியிற்கண்ட பாடங் கொள்ளின், அவற்றிடை இவ்வேற்றுமைச் சிறப்பினை உட்கொண்டுரைத்த ஆசிரியர்நோக்கம் பழுதுபடும். ஆகையால், அப் பிறழ்ச்சி குற்றமுடைத்தென்று தள்ளத்தக்கது.

பரிசோதனம் 21. (வினையியல் 20.) "பன்மையு மொருமையும் பாலறி வந்த, வம்மூ விரண்டு மஃறிணை யவ்வே" என்பது சூத்திரம். "பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் அறியவந்த ஈற்றுச்சொற்களும் அஃறிணைக்குரிய வினைச்சொல் என்றவாறு" என இதன் உரை அச்சுப்புத்தகத்திற் பதிக்கப்பட்டிருக்கிறது. இங்கு 'ஈற்றுச்சொற்களும்' என்புழிப் பிழை யுள்ளது. ஏனெனில் அதன்கண் உம்மை பொருளுணர்த்தலின்றி இடர்ப்படுத்துகின்றது.

பழையபிரதியில் இவ்வுரை, "பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் அறியவந்த ஆறு ஈற்றுச்சொற்களும் அஃறிணைக்குரிய வினைச்சொல் என்றவாறு" என மிகத் தெளிவாய் வரையப்பட்டுவிளங்குகிறது. இங்கு உம்மை ஆறு என்னும் எண்ணினோடியைந்த முற்றும்மைப்பொருள் தருவதோடு, சூத்திரத்திலுள்ள "அம்மூவிரண்டும்" என்ற பகுதிக்கு ஏற்ற உரையாகவும் அமைகின்றது. அன்றியும், சேனாவரையரும் இங்கு இவ்வாறே உரைத்தனர். ஆறு ஈறுவன—அ, ஆ, வ; து, று, டு: என்பன. இவ்வாற்றான் இங்ஙனம் பின்னர்க்குறித்த பாடமே திருத்தமுடைத்தென்பது வெளிப்படை. ஏடுபெயர்த்தெழுதுங்கால் 'ஆறு' என்னுஞ்சொல் இடையே விழுந்தொழிந்தமையால் இத்தவறு நேர்ந்திட்டது.

[தொடரும்.]

T. N. அப்பனையங்கார்,
தலைமைத்தமிழாசிரியர்,
இராமேசுவரதேவஸ்தானம் பாடசாலை,
மதுரை.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[செந்தமிழ்த் தொகுதி உக, பகுதி ௪, பக்கம் க௪க, முகப்பு.]

அயோத்தியாகாண்டம் மந்தரைசூழ்ச்சிப்படலத்தின் முதற் பக்கத்தில் 'என்று கூறவானுனன்' என முடியும் கரு-ம் வரிக்குப் பின் அடியில் வருவதைச் சேர்த்துக்கொள்க.

அரசர்க்குரிய உறுதிப்பொருள்களை
வசிட்டன் இராமனுக்குக் கூறுதல்.

(அந்தணர்பெருமை)

'கரிய மாலினும், கண்ணுத லானினும்,
உரிய தாமரை மேல்உறை வானினும்,
விரியும் பூதமொ ரைந்தினும், மெய்யினும்
பெரியர், அந்தணர்; பேணுதி உள்ளத்தால்'.

இ-ள். 'அந்தணர், மும்மூர்த்திகளைக்காட்டிலும் (எங்கும்) பரந்த பஞ்சபூதங்களைக்காட்டிலும் பரம்பொருளையேகாட்டிலும் பெருமையுடையவர்கள்: (ஆதலால்) அவர்களை (வெளிச்செயலாகமட்டுமன்றி) மனப்பூர்வமாக (வும்) வழிபடுவாயாக'.

மால் - விட்டுணு. கண்ணுதல் - கண்(ணை உடைய) நெற்றி(யையுடைய சிவன்). உரிய தாமரை மேல் உறைவான் - (தனக்கு) உரிமையான தாமரை (மலராகிய ஆதனத்தின்)மீது வீற்றிருப்பவன் (ஆகிய பிரமன்). ஐம்பூதம் - பிருதிவி (மண்) அப்பு (நீர்) தேயு (தீ) வாயு (காற்று) ஆகாயமென்னும் அஞ்சு தத்துவங்கள். தத்துவங்கள் சூக்குமமாய்த் தேகத்தின் அகத்தே உள்ளவை. மேய் - உள்ளது - (என்றும் உள்ளதாகிய) பரம்பொருள். சத்து சித்து ஆனந்தம் ஆகிய சச்சிதானந்தம் என்பதில் என்றும் உள்ளது என்னும் பொருளுடைய *சத்து, பிரமத்தை உணர்த்தல் காண்க. மெய்யன் என்பது கடவுள் என்னும் பொருளுடையது என்பதையும் கருதுக. இராமசாதகம் சேஷசாஸ்திரியார் இயற்றிப் பதிப்பித்திருக்கிற அயோத்தியாகாண்ட உரையில், மேலே கூறிய மேய் என்ற பதத்துக்குப் பரமாத்துமா

*சத்து - என்றும் உள்ளது (தமிழகராதி), பிரமம் (தமிழ்ச் சொல்லகராதி).

என்று உரையெழுதியிருப்பதும் ஓர்க. பரமாத்துமா, கடவுள், பிரமம், பரம்பொருள் என்பவை ஒருபொருள் குறித்தவை. பேணுதல் - வழிபடுதல் (தமிழகராதி). உள்ளத்தால் - உள்ளத்தோடு - மனசார. ஆல் உருபு உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது.

அந்தணர்பெருமையை இங்கே விதந்துகூறியிருப்பதுபோல, எங்கும் கூறியிருப்பதாகத் தெரியவில்லை. கூறமுடியுமென்று நினைக்கவும் முடியவில்லை: ஏனெனில், (எல்லாவற்றினும்) பெரிது என்ற பொருளுடைய பிரமம் என்னும் பரம்பொருளுக்குப், பெரிதாகவாதல் ஒப்பாகவேனுமாதல் ஒரு பொருளிருந்தாலன்றோ, அப்பொருளினும் பெரியர் அந்தணரென்று கூறமுடியு மென்பது.

வசிட்டமுனிவன், இராமனுக்கு இராசநீதி போதிப்பானாய் முதல் முதலாக அந்தணர்பெருமையைக் கூறுகின்றான். அதற்கு நியாயம்,—பூவுலகத்தில் அறிவில்பொருள்களினும் பெருமையுடையவை, ஓர்அறிவு முதல் ஐயறிவு ஈறாக உடைய படிப்படியாக உயர்ந்த அறிவுடைப்பொருள்கள்; அவைகளினும் பெருமையுடையவர், ஆறறிவுடைய மக்கள்; அவர்களுள்ளே சிறந்த பெருமையுடையவர், ஆறும் அறிவாகிய பகுத்தறிவினும் மேலாம் அறிவாகிய தத்துவஞானமுடைய அந்தணரென்பதாம். அது பொருந்தும்: ஆயினும், அந்தப் படிப்படி உயர்முறை, பூதம் மூவர் பரம்பொருளென வரிசைப் படுத்தாமல் மூவர் பூதம் பரம்பொருளென வரிசைப்படுத்தியிருப்பதில் இல்லையேயெனில், உள்ளதே. எவ்வாறுள்ளதெனில், பரம்பொருளொன்றே, ஐம்பூதங்களடங்கிய தத்துவத்தைக் கடந்த பொருள்; மூவரும் பூதங்களும் தத்துவத்துக் குட்பட்ட பொருள்கள்; எல்லா உயிர்களின் உடல்களும் பூதங்களின் பகுதிகளாலாகிப் பூதியங்களெனப்படும். இவ்விதிக்கு விலக்காயில்லாமல், மும்மூர்த்திகளின் மிகவுந் தூய மூர்த்தங்களும் (தேகங்களும்), பூதங்களின் மிகத் தூய்மையான பகுதிகளாலாகிய பூதசாரசரீரங்களே; ஆகவே, மும் மூர்த்திகள் பரம்பொருளின் சிறந்த அம்சபூதரேயானாலும், அவர்களுடைய தேகங்கள் பூதங்களின் பாகங்களே: அவர்கள் அவர்களுடைய தேகங்களினுள் அடங்கியவர்களென்பது கூறவேண்டியதில்லை. எப்பொருளும் அதன் பாகத்தினும் பெரிதென்பது தானே விளங்கும்: விளங்கவே,

மும்மூர்த்திகளடங்கிய அவர்கள் தேகங்கள் ஐம்பூதங்களின் பாகங்களாம் சிறுமைபற்றி அவர்களை முதலினும், அப்பூதங்களை அவர்கள் பின்னும், அவைகளடங்கிய தத்துவத்தைக்கடந்த பரம்பொருளை அவைகளின் பின்னும் படிப்படி உயர்முறையாக (சோபானக்கிரமமாக) வைத்தானென்பது.

கம்பர், பரம்பொருளை 'மூன்று கவடாய் (மும்மூர்த்திகளாய்) முளைத்தெழுந்த மூலம்' என்றும், பரம்பொருளின் பின்னும்சபூதரான 'செங்கண்மால் நான்முகன் சிவனென் றேகொலோ - (பரம்பொருளின் பூர்ணாம்சபூதனான) எங்கள்நா யகனையும் (இராமனையும்) நினைந்த தேழைமீ' என்றும், சிவவிட்டுணுக்களை 'யாரினு முயர்ந்த மூலத் தொருவராம் இருவர்' என்றும், 'அரன்அதிகன் உலகளந்த அரிஅதிகன் என்றுரைக்கும் அறிவிலோர்' என்றும், பரம்பொருள், மூன்றுகூறாய் விட்டுணுவும் பிரமனும் சிவனுமாகி, முறையே 'ஆலமும் மலரும் வெள்ளிப்பொருப்பும் (உறைவிடமாக அமர்ந்து, அவைகளை)விட்டு, (மூன்று கூறும் ஒன்றுசேர்ந்த ,முழுத்தனி முதல்வனாகி இராமனாக) அயோத்தி வந்தான்' என்றும் கூறியிருக்கின்றார். அவர், பரம்பொருள், ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொருவரிடம் முனைந்துநின்று தொழிலாற்றல்பற்றி, அவ்வச்சமயத்தில் அவ்வவரை உயர்ந்தவரென்பதன்றி, எப்போதும் ஒருவரை மற்றவரினும் உயர்ந்தவரெனக் கருதும் சமயவாதக்கொள்கையுடையரல்லரென்பது, நடுநிலைநின்று கம்பராமாயணமுழுதும் ஆராய்வார்க்குத் தெளிவாம். ஆதலால், இங்கே, 'கரிய மாலினும் கண்ணுதலானினும்—உரியதாமரை மேலுறை வானினும்' என வசிட்டன்கூறுகக்கூறியது, படிப்படி யுயர்முறைபற்றியதாயில்லாமல் 'உமைக்கு நாதற்கு மோங்குபுள் ளூர்திக்கும்—இமைப்பி னாட்டமொ ரெட்டுடையானுக்கும்' என்றதுபோல மும்மூர்த்திகளை உயர்வுதாழ்வு குறியாது கூறியதாயுள்ளதென்பது கவனிக்கத்தக்கது.

மேற்கூறியவாற்றால், மும்மூர்த்திகளினும் பூதங்கள் பெரியவை, பூதங்களினும் பரம்பொருள் பெரிது என்றது பொருந்துமாயினும், மும்மூர்த்திகளுள் ஒருவரால் படைக்கப்பட்ட அந்தணர், அவ்வொருவரையுள்ளிட்ட மூவர் பூதம் பரம்பொருளென்னும் முத்திறப்பொருள்களினும் பெரியரென்றது, பரமாணு பிரமாண்டத்தினும் பெரிதென்றாற்

போலச் சற்றும் பொருந்தாததாகத் தோன்றுகின்றதே, இது பொருந்துமாறும் உளதோ, உளதேல், அஃது யாதெனில்,—புற வுலகில் முன் அறியப்படாததனால் காரியாம்சத்தில் இல்லாததாகவிருந்த அமெரிக்காவைக் கோலம்பஸ் என்பார் பெரிது முயன்று கண்டுபிடித்து மற்றவர்களுக்குக் காட்டிக்கொடுத்து இம்மைப்பயனடையச்செய்ததுபோல, அகவுலகில் முன் அறியப்படாதிருந்த திரிமூர்த்திகள் பஞ்சபூதங்களடங்கிய தத்துவங்கள் *தத்துவாதீதமான பரம்பொருள் ஆகிய மூவகைப்பொருள்களையும் அந்தணர், அரிது முயன்று கண்டுபிடித்து; மற்றவர்களுக்குக் காட்டிக்கொடுத்து மறுமைப்பயனடையச்செய்த ஒப்புயர்வற்ற சீரிய கொடையாளராவர்: ஒருபொருளைக் கொடுத்தவனை அப்பொருளினும் பெருமையுடையவனென்னும் முறைப்படி, மேற்கூறிய முப்பொருள்களைக் கொடுத்த அந்தணரை அப்பொருள்களினும் பெருமையுடையாரென்றானென்பது.

இந்தக் கவியில் வரும் மெய்போலத் திருக்குறளில் மெய்யுணர்தல் என்னும் அதிகாரப் பெயரில் வரும் மெய்யும் அந்த அதிகாரத்தில் 'எப்பொருள்' 'கற்றீண்டு' என்னுங் குறள்களில் வரும் மெய்யும் 'ஓர்த்துள்ளம்' என்ற குறளில் வரும் உள்ளதும் பரம்பொருளை உணர்த்துதல் அறியத்தக்கது.

இந்தக் கவியிலும் இதற்குப்பின்னுள்ள 'அந்தணர்' 'ஆவதற்கும்' என்ற கவிகளிலும் கூறப்பெற்ற அந்தணர் என்னும் பெயரும் அந்தணரது பெருமையும் திருக்குறளில் நீத்தார்பெருமை யென்னும் அதிகாரத்ில்வரும் அந்தணர் என்ற பெயரோடும் அப்பெயருடையாரது பெருமையோடும் ஒத்திருத்தல் கருதத்தக்கது.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

*தத்துவாதீதம் - தத்துவங்கடந்தது.

சித்தசுத்தி.

(மனத்தூய்மை)

V. S. ராமஸ்வாமிசாஸ்திரிகள், B.A., B.L. அவர்கள் எழுதுவது.

[௬௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

மனத்தூய்மை வரவேண்டுமென்றால், தன்னுடைய சுகத்தை எப்படித் தேடுகிறானோ, அவ்விதமே பிறருடைய நன்மையையும் தேடவேண்டும்; தான் வேறு, பிறன் வேறு என்று நினைக்கக்கூடாது; பிறருடைய நன்மையில் சுயநலத்தை அமிழ்த்துதல்வேண்டும்; தனது ஆன்மாவை எங்கும் நிறைந்ததாகவும், ஸர்வமயமாகவும் கருதுதல்வேண்டும். அப்பொழுதுதான் சித்தசுத்தியுண்டாகும். அப்படியல்லாமல் ஒருவன் இடுப்பில் கோவணம் தரித்துச் சம்சாரத்தைத் துறந்து, பிக்ஷாவிருத்தியைக் கைக்கொண்டு, வீடுதோறும் ஹரிநாமஸங்கீர்த்தனஞ்செய்து கொண்டுதிரிந்தாலும், அவனுக்குச் சித்தசுத்தி ஏற்படாது. பக்ஷாந்தரத்தில், ராஜஸிம்ஹாஸநத்தின்மீது மணிகளாலிழைக்கப்பெற்ற ஆஸநத்திலமர்ந்து, சிறந்த ஆபரணங்களையணிந்துவிளங்கினாலும், எந்த அரசன் எளியவர்களான தனது பிரஜைகளின் துக்கத்தைத் தன்னுடைய துக்கமாகப் பாவிக்கிறானோ, அவனுக்கே மனத்தூய்மையுண்டாகும். மஹர்ஷியாயிருந்தும், எவர் விசுவாமித்திரருக்கு ஒரு பசுமாட்டைக்கொடுக்க மறுத்தாரோ, அவருக்குச் சித்தசுத்தி பூர்ணமாயில்லை. எந்த அரசன் புறாவொன்றைக் காக்கவேண்டித் தனது சரீரத்திலிருந்து மாம்சத்தை வெட்டிவெட்டிக் கொடுத்தானோ, அவனுக்கே மனத்தூய்மை நிறைவானது. சித்தசுத்திக்கு இதைக்காட்டிலும் விசேஷமான வேறு லக்ஷணமொன்றுண்டு. எவர் எல்லாச்சுத்திகளையும் படைத்தவரோ, எவர் சுத்திமயமானவரோ, எவருடைய கிருபையே சுத்தியோ, எவருடைய தயையைத் தவிர்த்துச் சுத்தியென்பது வேறில்லையோ, அந்த ஸர்வேசுவரனிடம் ஆழ்ந்த பக்தியே சித்தசுத்தியின் முக்கியமான லக்ஷணம். மனத்தூய்மையின் முதலாவது லக்ஷணமாக நாம் எதைக் குறித்தோமோ, அதன் முக்கியமான தாத்பர்யம், ஹிருதயத்தின் சாந்தியென்பது. இரண்டாவது லக்ஷணம் ஸர்வமனிதர்களிடமும் பிரீதியேயாம். மூன்றாவது லக்ஷணம் ஈசுவரபக்தி. ஆகையால் மனத்தூய்மையின் லக்ஷணங்கள் ஈசுவரபக்தியும், மனுஷ்யப்பிரீதியும், ஹிருதயசாந்தியுமேயாம். இதுவே ஹிந்துதர்மத்தின் மர்மம்.

பக்தி, பிரீதி, சாந்தி என்கிற லக்ஷணங்களுடன் கூடியதான சித்தசுத்தியை, ஹிந்துசாஸ்திரமறிந்தவர்கள், எவ்விதமாக வருணித்திருக்கிறார்கள் என்பதை உதாரணரூபமாக, ஸ்ரீ பாகவதம் ௩-வது ஸ்கந்தத்திலிருந்து, கீழேயெழுதப்பெற்ற சுலோகங்களாகிய பகவானுடைய வசனங்களால் தெரிவிப்போம். [ஸ்ரீமத் பாகவதம், ௩-வது ஸ்கந்தம், ௨௯-வது அத்தியாயம், ௧0-முதல் ௨௨-வரை சுலோகங்கள்; ஈசுவராவதாரமான பகவான் கபிலர் தமது மாதாவான தேவஹூதியம்மாளுக்குத் தத்வோபதேசம்செய்த பிரகாரணம்.] சுலோகங்களின் அர்த்தமாவது:—

அம்மா! நிர்க்குணபக்தியோகம் எவ்விதமானதென்று சொல்லுகிறோம், கேட்பீர்களாக. அது, ஸர்வாந்தர்யாமியாக எந்தப் பகவான் இருக்கிறாரோ அந்தப் புருஷோத்தமனிடம், சமுத்திரத்தில் கங்கைமுதலான நதிகள் எவ்விதம் ஒன்றாய்க் கலந்துவிடுகின்றனவோ, அவ்விதமே இடைவிடாததாயும் பயனைக் கருதாததாயுமுள்ள பக்தியேயாம். அவருக்கும் நமக்கும் பேதம் காணாததான மனோநிலையே பக்தியென்பது. அதுவே நிர்க்குணபக்தியின் லக்ஷணம் (10). எவர்களிடம் இவ்விதமான பக்தியோகம் இருக்கிறதோ அவர்களுக்கு ஒருவிதமான விருப்பமும் இருக்காது. அதிகமாயுரைப்பதில் பிரயோசனமில்லை. அவர்களுக்கு (ஸாலோக்யம்) நம்முடன்கூட ஓரேயுலகத்தில் வாசம், (ஸார்ஷ்டி) நமக்குச்சமமான ஐசுவரியம், (ஸாமீப்யம்) நம்முடைய சமீபத்திலேயிருத்தல், (ஸாரூப்யம்) நமக்குச்சமானமான ரூபத்தை யடைதல், (ஸாயுஜ்யம்) நம்முடன் ஒன்றாய்க்கலத்தல், இவ்விதமான முக்திகளையெல்லாம் அவர்களுக்கு நாம் அளிப்போமென்றாலும் நம்முடைய சேவையைத்தவிர மற்றொன்றையும் கிரகித்துக்கொள்ள அந்தப் பக்தர்கள் விரும்பமாட்டார்கள் (11). தாயே! இவ்விதமான பக்தியோகத்தையே அந்தரங்கபக்தியென்று சொல்லுவார்கள். இந்தப் பக்தியைத் தவிரப் பரமபுருஷார்த்தம் வேறொன்றுமில்லை. மனுஷ்யன் முக்குணங்களையும் விட்டுவிட்டுப் பிர்ம்மத்தையடைவதே முக்தியமென்பது பிரசித்தமாயிருப்பது சரி; அது இந்தப் பக்தியின்சார்பாக வந்தது. பக்தியோகத்தாலேயே பிர்ம்மப்பிராப்தி கைகூடும் (12). அன்னையே! இந்தப் பக்தியின் ஸாதனத்தைச் சொல்லுகிறேன்; செவிசாற்றுவீர்களாக. பயனில் ஆசைவைக்காமல் ஒருவன் தனது நித்திய நைமித்திக கருமங்களை அநுஷ்டித்தும், சிரத்தை முதலியவற்றுடன் கூடினவனாய்,

நிஷ்காமனாய், ஹிம்ஸைசெய்யாதவனாய் இருந்து, பாஞ்சராத்ரம் முதலான சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கிறபிரகாரம் பூஜைசெய்வதால் (13) நம்முடைய பிரதிமைகளைத் தர்சனம்செய்தல், ஸ்பர்சித்தல், பூஜித்தல், துதித்தல், வந்தனைசெய்தல், எல்லாப்பிராணிகளிடமும் நம்முடையபாவனையையே செய்தல், தைரியம், வைராக்கியம், பெரியோர்களைச் சன்மானித்தல், தீனர்களிடம் தயை, தன்னையொத்தவர்களிடம் மித்திரபாவனை, யமம் (அதாவது வெளியிந்திரியங்களை யடக்குதல்), நியமம் (அதாவது அந்தரிந்திரியத்தை அடக்குதல்), ஆத்மதத்துவவிஷயத்தைச் சிரவணஞ்செய்தல், நமது திருநாமத்தை எப்பொழுதும் கீர்த்தனஞ்செய்தல், நல்லொழுக்கம், சாதுக்களுடன் சேர்க்கை, அகங்காரமின்மை (14), இவ்விதமான ஸர்வகுணங்களுடனும் கூடினவனாய்ப் பகவானுடைய தருமத்தை அநுஷ்டிப்பவனுடைய மனமே தூய்மையுள்ளதாயிருக்கும். அவன் யாதொரு பிரயத்னமுமில்லாமலே, நமது குணங்களைச் சிரவணஞ்செய்தமாத்திரத்திலேயே நம்மையடைவான் (15). நற்கந்தமானது தனதிடத்தைவிட்டுக் காற்றுடன்சேர்ந்து எவ்விதம் நாசியில் நுழையுமோ, அதுபோலவே பக்தியோகம் செய்கிற அதிகாரியின் சித்தமும் பிரயத்னமில்லாமலே இலகுவாகப் பரமாத்மாவையடையும் (16). ஸர்வப்பிராணிகளையும், தன்னைப்போல் பார்ப்பதாலேயே இவ்விதமான சித்தசுத்தியேற்படும். நாம் எல்லாப்பிராணிகளிடமும் ஸர்வபூதங்களிடமும் விளங்குகிறோம். ஆனால் சிலர் நம்மை அவமதித்துப் போலிப்பூசையைச் செய்துகொண்டிருக்கிறார்கள் (17). மேலும் நாம் எல்லாப்பிராணிகளிடமு மிருக்கிறோம். எல்லாருக்கும் நாமே ஆன்மாவாயிருக்கிறோம்; ஈசுவரனாயிருக்கிறோம். எவனாகிலும் மூடத்தனத்தால் நம்மை உபேக்ஷைசெய்து பிரதிமைகளைப் பூஜைசெய்வானாகில் அதனால்மட்டும் அவனுக்கு யாதொருபயனும் ஏற்படாது; சாம்பலில் அவி சொரிந்ததுபோலாகும். எல்லோரிடமும் நாமே விளங்குகிறோமென்று நம்பிக்கைகொள்ளாமல், பிறர்களை அவன் அவமதிப்பதால் நம்மையே அவமதிக்கிறவனாகிறான். தன்னிடம் அபிமானம்வைத்தவனையும், பிறர்களை வேறாகப்பார்ப்பவனையும், அவர்களிடம் விரோதங்கொண்டவனையும் இருக்கிறவனுடைய மனம் ஒருக்காலும் சாந்தியை அடையமாட்டாது (18). குற்றமற்றவளே! எவன் பிராணிஸமூகத்தை நிந்தனைசெய்பவனோ, அவன் அநேகதிரவியங்களாலும், திரவியங்களால் சம்பாதிக்கப்பட்ட கிரியைகளாலும், நம்முடையபிரதிமைகளில் நம்மையேபூஜைசெய்தாலும், அவனிடம் நாம் சந்தோஷமடையவே

மாட்டோம்(19). அம்மா! இவ்விதமாக விவேசனஞ்செய்யாமல் அர்ச்சனைசெய்தல் பயனற்றதேயாம். புருஷன் எதுவரையில் ஸர்வப் பிராணிகளிடமும் நிறைந்துள்ள நம்மைத் தனது ஹிருதயமத்தியில் அறியமுடியவில்லையோ, அவன் ஸ்வகர்மங்களிலேயே பிரீதியுள்ளவனாயிருப்பான்; பிரதிமைகளில் அர்ச்சனைசெய்வதுபோல் பாவனைசெய்வான் (20). ஆனால் எந்த மூடன் தனக்கும் பிறர்க்கும் அல்பமாயாவது பேதத்தைக் காட்டுகிறானோ (அதாவது பிறருடைய துக்கத்தையும் தனது துக்கம்போல் உணரவில்லையோ), அவனுக்கு நாம் மிருத்யுஸ்வரூபமாயிருந்து கோரமான பயத்தைச் செய்வோம் (21). ஆகையால் புருஷர்களின் கடமையாவது:—நம்மை எல்லாப்பூதங்களின் அந்தர்யாமியாகவும் ஸகலப்பிராணிகளிடமும் இருப்பவராகவும் அறிந்து அவன் தானம், மானம் முதலிய ஸர்வகுணங்களுடனுங்கூடினவனாய், மைத்திரம், ஸமதிருஷ்டி இவைகளுடன் எல்லாப்பிராணிகளையும் அருச்சனைசெய்கிறானோ, அவனுக்கே எல்லாப்பலன்களும் கைகூடும் (22).

சித்தசுத்தியின்விஷயத்தில் இவ்விதமாக விஷயங்களை ஹிந்து கிரந்தங்களிலிருந்து எடுத்து எழுதிக்கொண்டேபோனால் இவ்வுபந்யாஸம் வளர்ந்துவிடும். அதிகமாயுரைப்பதில் பிரயோசனமில்லை. மனத்தூய்மையில்லாமல் ஈசுவரப்பிரதிமைகளைப் பூசித்தலால் ஒருபயனும் ஸித்திக்காது; ஒருதருமமும் ஏற்படாது. அவ்விதமான பிரதிமை பூஜையே பரிகசித்ததுபோலாகும்.

மனத்தூய்மையே மனிதர்களுடைய ஸகலவிருத்திகளுக்கும் நிறைவும் முடிவுமாம். பக்தியும், பிரீதியும் கார்யங்களை நிறைவேற்றக்கூடிய விருத்திகளே. ஆனாலும் ஞானத்தைக் கொடுக்கக்கூடிய விருத்திகளை அநுசிலனஞ்செய்யாமல், தர்மத்தின் ஸ்வரூபத்தை அறிந்துகொள்ள இயலாது. சித்தத்தைத் தூய்மைப்படுத்தக்கூடிய விருத்திகளை அநுசீலனஞ்செய்தாலொழியத் தர்மத்தின்பெருமையையும், அழகையும் நன்றாய் அறியமுடியாது. சாரீரகமான விருத்திகளையெல்லாம் அநுசீலனம்செய்யாமல், தர்மகார்யங்களை நிறைவேற்ற யோக்யதையேற்படாது. ஆகையால் மனத்தூய்மையே, எல்லாவிருத்திகளையும், நன்றாயநுசீலனம்செய்தற்கும் ஒழுங்காக வைத்துக்கொள்வதற்கும் பயனாகும்.

தண்ணீரும் எண்ணெயும்.

[நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர் எழுதியது.]

எமது தேனிலும் இனிய தீந்தமிழின் அடிகளும் வடமொழி, கிரேக்கம், லத்தீனியம், சர்மனியம், ஆங்கிலம் ஆதிய ஆரியமொழிகளின் அடிகளும் ஒன்றே என்பது எனது கொள்கை. இதை மறுத்துரைப்பாரும் உளர். அன்னோர் சொல்லும் தடை பின்வருவது:—

"திராவிடமும் ஆரியமும் தாதுக்கள்மட்டில் ஒன்றே என்கின்றீர்; அங்ஙனமாயின் இருவகைமொழியாளரும் வழங்குகின்ற மிகப்பழமையான பெயரீடுகளுள் ஒற்றுமை காணப்படல்வேண்டுமே! மாநுடருக்கு இன்றியமையாதனவாயுள்ள பொருட்களுக்கு இடப்பட்ட பெயர்களே மிகப் பழமையான சொற்களாகும். உதாரணம்: தண்ணீரும் எண்ணெயும் எவ்வெக்காலத்தும் மக்களுக்கு அவசியமானவை. இவற்றின் பெயரீடு ஆதிதொட்டே மக்களுள் வழங்கியிருத்தல்வேண்டும். ஆயின் திராவிடத்தில் தண்ணீர் என்பதை ஆரியபாஷைகளில் உதகம், உவாட்டர் (water) ஆதிய பெயர்களாலன்றோ சொல்லுகின்றனர்? எண்ணெயை ஸ்நேகம், ஆயில் (oil) எனவன்றோ பெயரிடுகின்றனர்? இங்ஙனமாகும்போது நுமது அடியொற்றுமை முயற்கொம்பாகின்றதே?" என்பர்.

சூடுதணிந்த நீர்.

இதற்கு விடை மேல்வருவது: திராவிடமொழிகளும் ஆரியமொழிகளும் ஒன்றாயிருந்தகாலம், வரையறுக்கக்கூடாத ஒரு புராதனகாலமாம். அப் பண்டைநாட்களில் வழங்கிய சொற்களுள்ளே சில ஒருபகுதியாரிடத்தும், சில ஒருபகுதியாரிடத்துமாக வழக்கிறந்துபோயிருத்தல் கூடாதா? திராவிடத்திலே தண்ணீரும் எண்ணெயும் பிற்காலத்துச் சொற்கள் என்பது யாவர்க்கும் புலமாகும். பிற்காலத்துத் திராவிடச் சொற்களை நாம் பண்டைக்காலத்திற் பிரிந்துபோன ஆரியமொழிகளில் தேடுதல் ஒக்குமா? அவற்றிற்கும் திராவிடமொழிகளுக்கும் பொதுவாயிருந்த அடிச்சொற்கள் எமது மொழிகளிற் சிதைந்து வேறுபட்டிருப்பதுபோல, அம்மொழிகளிலும் திரிபுபட்டன்றோ கிடக்கும்.

இனி, தண்ணீர் என்றது ஒருசொன்னீர்மையான தொடர்ச்சொல். தணி (ந்த) நீர் தண்ணீர் ஆயிற்று. தணிதல் எனும் உருவம் தாழ்தலினின்றுவந்து, குறைதல் எனும் பொருளை உணர்த்தும். "விளக்குத் தணிந்தது" எனும்போது சுடர்குறைந்ததை அன்றேல் அற்றுப் போனதை உணர்த்துகின்றோம். சூடுகுறைந்த நீர் (குளிர்ந்த நீர்) தணிநீர். தணிதலே தண்மை, தட்பம் ஆகிய பண்புச்சொற்களாயும் வரும். அப்பால் தணி, தண்மை ஆகிய வழிச்சொற்கள் ஆரியமொழிகளில் நமக்கு எதிர்ப்படாவிடினும் இவற்றின் அடியாகிய தாழ்தலை வடமொழி தர, லத்தின் தர (dare) ஆதியவற்றிற் காணுதல்கூடும். இழிந்தோர்க்கு ஈயும்பொருட்டுக் கையைத் தாழ்த்தலே தாதல் (தருதல்) ஆம். வடமொழி தாவும் அது. இச்சொல் கிரேக்கமாதிய பிற ஆரியமொழிகளிலும் உண்டு. இனி நீர் எனுஞ்சொல்லும் நீரம் நாரம் என வடமொழியில் நிற்கும். நீர்ச்சொல்லிற்கு முற்பட்டதாகிய ஈரம் எனும் தமிழுருவத்தின் பகுதியை ஆர் - த்ர எனும் வடசொல்லிற் காணலாம்.

ஆயின், தண்ணீர் எனும் பிற்காலத்தமிழ்த்தொடர்ச்சொல் அப்படியே பிறபாஷைகளிற் காணப்பட்டுவிடல்வேண்டும் என்று ஒரு நியதம் இல்லை. ஆதிகாலத்திலே திராவிடத்தில் நீருக்குவழங்கிய வேறொரு சொல் உண்டாமாயின், அதுதான் பிறமொழிகளிலும் காணப்படுதல் ஏற்புடைத்தாகும். இவ்வாறான ஆதிச்சொல் ஒன்று உண்டா? அதுதான் ஓதம் எனுஞ்சொல். பழந்தமிழில் ஓதம் வெள்ளத்தை உணர்த்தும். (வெள்ளம் இன்றைக்கும் மலையாளத்தில் தண்ணீரின்பெயராயிருத்தலை நோக்குக). அப்பால் ஓதம் கடற்றிரையை, கடலை, ஈரத்தையும் குறிக்கும். "வழிசிதைய வூர்கின்ற ஓதமே" (சிலப். 7, 35) "கடலோதங் காலலைப்ப" (நாலாயிரதிவ்யப்பிரபந். இயற். 1, 16) "ஓதமலி நஞ்சுண்ட வுடையானே" (திருவாச. 38, 3) ஆதியன காண்க. இவ் ஓதச்சொல் ஓடுதலினின்று எழுந்தது. ஓடம் என்பது ஓடுவதில் நின்று பிறந்த வேறொரு கிளைச்சொல். ஓடும் கலம் ஓடம். ஓடை என்பதும் ஒன்று. நீர் ஓடும் கால்வாய் ஓடை. ஓடுகின்ற நீர்தானே ஓதமாம். ஆதலால் ஓதச்சொல் தமிழ்ச்சொல்லே என்பது தேற்றம்.

ஆரியமொழிகளில் ஓதம் எனுஞ்சொல்.

இதுதான் ஆரியபாஷைகளிலே இன்றைக்கும் நீருக்குப்பெயராயிருத்தலை இனி நோக்குவோம். வடமொழி உத, உதந், உதக; கிரேக்க ஹூடொர் (hudor); லத்தீன் உண்ட (unda); கொதிக் உவத்தொ (wato); பழஞ்சர்மனிய உவஸ்ஸர் (wazzar); பழம் ஆங்கில உவோற்றர் (woeter); சிங்கள உவத்துற (watura) இவையெல்லாம் யாதிலிருந்து திரிந்து பிறந்தன? ஓதம் எனும் ஆதிச்சொல்லிலிருந்துதான் என்பதற்கு ஐயப்பாடு ஒருசிறிதும் இல்லை. இத்திரிபுகளில் ஓகாரம் உகாரமாகவும் உவ எனவும் மாறுதல் ஒன்று; தகாரம் ஸகாரமாதல் வேறொன்று. இவையிரண்டுதிரிபாலும் ஓதம் உவஸ்ஸ என்றாயிற்று. தகரத்தோடு றகரத்தைச்சேர்த்து உச்சரித்தல் வேறொருதிரிபு. இதனால் உவத என்பது உவத்ற உவத்தர் என ஆயிற்று. வடமொழியின் ஓத்மர் எனும் உருவத்திற்கு ஓடுவது எனவும்; ஓஉதீ என்பதற்குச் சுரப்பது, வெளிப்பட்டு ஓடுவது எனவும்; ஓதநம் என்பதற்கு நீர்த்தன்மையுள்ள உணவு, மழைமுகில் எனவும் பொருளிருப்பதையும் நோக்குக. இவையெல்லாம் எமது ஓதத்தின் திரிபுகளே ஆகும். ஓடு எனும் அடியை வடமொழியாளர் உத் என வைப்பர். நீரின் பழையபெயர் இவ்வாறே பல ஆரியமொழிகளில் இருத்தலைக் கண்டுகொள்க.

இனி, எண்ணெய் எனும் தொடர்நிலையை நோக்குவோம். நெய்யுள்ளபொருள் ஒன்றையே எள் குறிக்கின்றமையால் இங்கு எள் + நெய் என இருசொல்லடுக்கியது மிகையாகும். எள் எனுஞ்சொல் எவ்வாறு நெய்ப்பொருளைக் குறிக்கும் என்பது பின்னால் விளக்கப்படும். அது சிங்களத்தில் தெல் எனவும், வடமொழியில் தில எனவும் நிற்கும். இங்கு, தகரம் வலியுறுத்தும் சொல்முதல் மெய். நெய்தான் நேயம் என நின்று ஸ்நேஹம் என வடசொல்லாகும். இதில் ஸகாரம் ஆரியபாஷைகளில் பெரும்பான்மை வருகின்ற ஒரு முதனிலை. ஆரியர் ஸகாரத்தைக் கூட்டி உச்சரிப்பதிலே விருப்புடையர். தகரத்தையும் பலவிடங்களில் ஸகரமாக்கிவிடுவர். இதனை முன்னரும் காட்டினோம். இனி நெகிழ்தலினின்று நெய் வரலாயிற்று. நெகிழ்தல் நீளுதலாம். நீளுதல் எனும்

இவ் ஊழிச்சொல்லும் இழு எனும் அடியினின்று சொன்முதல் நகரம் பெற்றுப் பிறந்தது. ஆகவே இழு—நீள்—நெகிழ்—நெய் என வந்தமையை உய்த்துணர்க. நெய் தெலுங்கில் நெய்யி என நிற்றலையும் ஒப்புநோக்குக. நெகிழ்தலானது இழுபடுதல் (நீளுதல்), ஒட்டிக்கொள்ளுதல், இளகுதல் எனப் பொருள்கொள்ளும். "உண்ணெகிழ்தல்" என்ற பிரயோகத்தில் இளகுதற்பொருள் தோன்றும். இவ்வாறே எள்ளும் நெய்யும் பிறபட்டசொற்களாயினும் தமிழிற்போல, வடமொழியிலேயும் தில எனவும் ஸ்நேஹ எனவும் காணப்படுதல் நோக்கற்பாலது.

இழுது எனும் பழந்தமிழ்ச்சொல்.

ஆயின், எண்ணெய்க்குப் பழந்தமிழ் இழுது எனுஞ் சொல்லாகும். இழுதும் இழுபடுவதாலேயே உண்டான பெயரீடு. "இழுதமை எரிசுடர்விளக்கு" எனும் சீவகசிந்தாமணியில் (1576) இழுது எண்ணெய்ப்பொருளில் வருதல் காண்க. இழுது, இழு + அது எனப் பிரியும். இழுபடும் அது, ஒட்டிக்கொள்ளும் அது, நெகிழ்ச்சியுள்ள அது என வரும். இழுதைப்போலவே இழுகுதல் எனும் வினையும் நெகிழ்ச்சியுடைமையை, நெய்பூசுதலை விளக்கும்; "வெண்சுதை யிழுகிய மாடத்து" என்ற மணிமேகலையிற்போல (6, 43). அப்பால் எழுதுதலும் மைபூசுதலேயாம் எனக் காண்க. இச்சொல்லும் இழு எனும் அடியினின்று பிறந்ததாகலாம்.

இழு எனும் அடியினின்றுதான் இலுப்பை எனும் மரப்பெயர் தோன்றும். இலுப்பை இழுப்ப என்றதன் திரிபு. மலையாளத்தில் இது இலிப்ப என நிற்கும். இழுப்பு (=இழுது) + அ =இலுப்ப. இங்கு அ எனும் விகுதி அது எனுஞ்சொல்லின் கடைக்குறையாம். இலுப்பையைப்போல எள்ளும் இழுது பிழிந்தெடுக்கப்படுகின்ற விதையுள்ள செடியாம் என நுனித்துக்காண்க. இனி எமது இழுது, இலுப்பை, எள் எனுஞ்சொற்களின் அடியாகவே கிரேக்க எலயிய (elaia) (எலயிவ elaifa) எனும் எண்ணெய்மரப்பெயரும், எலயியொன்

எனும் எண்ணெய்ப்பெயரும் வந்தனவாதல்வேண்டும். எல்ப்பொஸ் (elpos, olphos) என்ற கிரேக்க உருவமும், அதின் திரிபுகளாகிய ஒல்ப்பே, ஒல்ப்பா (olpe, olpa) என்பனவும் இதை உறுதிப்படுத்துகின்றன. இச்சொற்களுக்கு ஐரோப்பியமொழிநூல்விற்பன்னர்கள் உற்பத்திசொல்ல அறியார். இலுப்ப எல்ப்பொஸ் என வந்ததில் எகரம் இகரத்தின் திரிபே என்பது வெளிப்படை. அப்பால் எகரம் ஒகரமாகி, எலயிவ எனும் சொல் லத்தீனில் ஒலிவ (oliva) என இலுப்பையையும், ஒலேயும் (oleum, oleuum) என இலுப்பைநெய்யையும் குறிக்கும். நெய்க்குப்பெயராகிய ஸர்ப்பிஸ் எனும் வடசொல்லும், எல்ப்பொஸ் எனும் கிரேக்கத்தைப்போல இலுப்பையினின்று எழுந்தது போலும். சர்மனிய ஸல்பெ, ஸல்வெ (Salbe, Salve) எனும் சொற்களையும் ஒப்புநோக்குக. பழம் ஆங்கிலத்தில் இது ஸெயலப் (Sealfe) என நிற்கும். இன்றைக்கு அது சால்வ் (Salve) எனப்படும். எண்ணையே குறிக்கின்ற இவ்வுருவங்கள் கிரேக்க ஒல்ப்பேயினின்று வந்ததென்பர். அக் கிரேக்கந்தான் எமது இலுப்பையின் திரிபாம். தற்கால ஆங்கில ஆயில் (oil) சர்மனிய ஏல் (oel) ஒல்லாந்த ஒலீ (olie) பிராஞ்சிய ஹூயில் (huile) ஆதிய ஆரியச்சொற்களெல்லாம் கிரேக்கத்தின் ஊடாகத் தமிழடி ஒன்றினின்றே திரிந்து பிறந்தன எனக் காண்க.

நெய்பூசுதற்பொருளுள்ள சொற்கள்.

இவைமட்டோ! கிரேக்க லிப்ப, லிப்பொஸ் (lipa, lipos); வடமொழி லிப், லிபி, லேப; லத்தீன் லிப்புஸ், லீனொ (lipus, lino) ஆதியவற்றின் அடியும் எமது இலுப்பையேயாம். இக் கிரேக்க வடசொற்களெல்லாம் நெய்பூசுதலைக் குறிக்கும். ஆகவே வடமொழி லிபியும் எமது எழுத்தும் ஒரே அடியாய்ப்பிறந்த விநோதத்தைக் குறிக்கொள்க. இழுது—இலுப்ப—லிப்—லிபி என்றது வடசொல்வரலாறு. இழுது—எழுது—எழுத்து என்பது தமிழ்ச்சொல் வரலாறு.

அப்பால், இழுப்பு எனுஞ்சொல் சர்மனியத்தில் லெபென் (leben) எனநின்று, இழுபடுதலை-நீட்டித்தலை-வாழுதலைக் குறிக்கும். இதுதான்

பழம் ஆங்கிலத்தில் லிவென் (liuien, liuen) எனவும், தற்கால ஆங்கிலத்தில் லிவ் (live) எனவும் வாழுதல் என்னும் பொருளில் வரும். தமிழ் இழுப்பும் இருப்பும் ஒருபுடை அணைந்துநிற்றலையும் நோக்குக. இழுப்பு சர்மனியத்தில் லீவென் (lieben) என நின்று அன்புகூருதலையும் சுட்டும். பழஞ்சர்மனியத்தில் லியுப்ப (liupa) எனவரும். அன்புக்குப் பழம் ஆங்கிலத்தில் லுவு (lufu) என்பதும் தற்கால ஆங்கிலத்தில் லவ் (love) என்பதும் பெயர். ஆகவே தமிழ் நேயமும் ஆங்கில லவ்வும் ஒரே அடியாய்ப்பிறந்த விபரீதத்தைக் கண்டுகொள்க. இழு—நீள்—நெகிழ்—நெய்—நேயம் இது தமிழ்வரலாறு. இழுப்பு—லியுப்ப—லுவு—லவ் இது ஆங்கிலவரலாறு. இதுமட்டன்று. வடமொழி லுஹ், லோல (அவா) என்பனவும் நமது இழுப்பேயாம் எனக் கண்டு மகிழ்க.

முடிவுரை.

இவ்வாறாய்ப் பிற்காலத்து எழுந்தனவாகிய எண்ணெய் தண்ணீர் எனும் இரு பெயரீடுகளும் ஆரியமொழிகளெல்லாவற்றிலும் காணப்படாவிடினும், இப்பொருட்களை உணர்த்தும் ஆதிப்பெயர்களாகிய ஓதமும், இழுதும் சகல ஆரியமொழிகளிலும் பரந்து திரிந்துநிற்கின்றன. இதனால் ஆரியமொழிகளுக்கும் திராவிடமொழிகளுக்கும் இடையில் அடியொற்றுமை உண்டெனச் சொல்லுதல் அதிசயோக்தியன்று உண்மையே எனத் தெளிக. இவ்வுண்மை எனது "தமிழ்ச்சொற்பிறப்பு—ஒப்பியல் அகராதி" வெளிப்படும்போது ஐயந்திரிபற நாட்டப்படுவதாகும்.

மதிப்புரை.

கிராதார்ச்சுநீயம்:—இது யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி வியாகரண மகோபாத்தியாயரான பிரமஸ்ரீ. வை. இராமசாமிசர்மா அவர்களால் வடமொழியினின்றும் நல்ல தமிழ்நடையில் தெளிவாயெழுதப்பட்டது. இதன்கண் ஒருவர் அறிவுநிரம்புதற்கு அறியவேண்டிய பொருள்களடக்கிய சம்பாஷணங்களும் நீதிநெறிகளும் செறிந்துள்ளன. இக்காலத்துப்பண்டிதர் தாமாகக் கற்பித்தெழுதும் புத்தகங்களைக் காட்டிலும் முற்காலத்து வடமொழியிற் சிறந்த பண்டிதர்களெழுதிப் புகழ்பெற்று விளங்கும் இத்தகைய புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த்தளிப்பது தமிழுலகிற்குப் பெரும்பேறளிப்பதாகக் கருதத்தக்கது. இதன் ஆசிரியர் இன்னும் இவ்வாறான புத்தகங்களை ஆக்கியளிக்குமாறு தமிழ்மக்கள் ஊக்கமளிப்பாராக.

இது கிடைக்குமிடம்:—தனலக்குமிபுத்தகசாலை, சுன்னாகம், வண்ணார்பண்ணை.

தமிழ்மொழியாராய்ச்சி:—இது கரணவாய் பண்டித. திரு, சேவ்வந்திநாததேசிகரால் எழுதப்பெற்றது. இதில், இதுவரை பல பண்டிதர்களும் தமிழ்மொழியைப்பற்றியெழுதிய ஆராய்ச்சிகளிலுள்ள பல விஷயங்களையும், தமது ஆராய்ச்சியில் தோன்றிய விஷயங்களையும் கொண்டு வரையப்பட்ட தமிழ்வரலாறுகள் அறியக்கிடக்கின்றன. முன்னுள்ள ஆராய்ச்சிகளைப் பார்த்துக்கொண்டு இவ்வாராய்ச்சி எழுதப்பட்டிருப்பதால் அவற்றிலில்லாத சில திருத்தங்களும் இதன்கட் காணப்படும். கரணவாய் வித்தியாபிவிருத்திசங்கத்தாரால் இப்புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஒவ்வொருசங்கத்தாரும் பண்டிதர்களெழுதும் புத்தகங்களை வெளியிட்டுதவுவார்களாயின், அது தமிழ்க்கல்விவளர்ச்சிக்கு மிகவும் உதவியாயிருக்கும்.

மங்கைக்கோர் மதியுரை:—இது ஸ்ரீமத். திரு. நா. பொ. மாசிலாமணிப்பிள்ளையவர்களால் எழுதப்பட்டது. இதனுள் பெண்மக்கள் அறிந்தொழுகவேண்டியதற்குரிய ஒழுக்கவழக்கங்கள்பலவும் தெளிவாகவும் சுருக்கமாகவும் வகுத்துரைக்கப்பட்டுள்ளன. இது அவர்களுக்கு நன்மதியும் நல்வாழ்க்கையு மளிக்கவல்லது.

கிடைக்குமிடம்:—தனலக்குமிபுத்தகசாலை, சன்னாகம், வண்ணார்பண்ணை.

சருவசனசேபம்:—இது, ராவ்ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் G. B. V. C. அவர்களால் 137-அகவலடிகளால் பாடப்பட்டது. இதில் சாதிமதபேதங்களால் மாறுபாடில்லாமல் எல்லோரும் அறிந்தொழுகவேண்டிய ஒழுக்கமுறைகளும் பிரார்த்தனைகளும் அடங்கியுள்ளன. இச் சிறுபுத்தகத்தைப்படித்து அதன்படி யொழுகுவோர் பெரும்பயனடைதற்குரியராவர். இதன் விலை அணா ஒன்று.

கிடைக்குமிடம்:— தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, அல்லது சென்னை.

நற்றாய் தன்மகள் இளமைத்தன்மைக்கு உளமெலிந் திரங்கல்.

353. பாவா யுறுகுழல் போற்கரந் தேரும் படிபுலவோர்
பாவாய் கலைசைத் தியாகர்நன் னாட்டிற் பயின்றதெங்கென்
பாவா யழேலென்று முத்தன்ன மூட்டியுன் பாதமண்ணிற்
பாவாய் நடந்து வராயென்று கொஞ்சுமென் பைங்கிளியே.(கச)

நற்றாய் தன்மகள் அச்சத்தன்மைக்கு அச்சமுற் றிரங்கல்.

354. நீர்த்தண் சுனைத்த வளைதத்தி னஞ்சுமென் னேரிழையாள்
தீர்த்தன் கலைசைத் தியாகேசன் வெற்பினிற் செல்லிடிபோல்
ஆர்த்தஞ் சனமத மாயா முறித்துண்ண லச்சுரத்திற்
பார்த்ததிர் வுற்று வெருஉமென் றெனெஞ்சம் பதைக்கின்றதே.

ஆயமும் தாயும் அழுங்கக் கண்டோர் காதலின் இரங்கல்.

355. புரகர ரெங்கள் கலைசைத் தியாகர் பொருப்பிடையாம்
பரிதவிக் கத்துறந் தாளென்று பாங்கியர் பஞ்சினைவார்
விரகறி தன்மக ளின்சொற் பயிற்றிய மென்கிளிதான்
அரகர வென்னநற் றாயழல் சேர்மெழு காயிடுமே. (கசு)

---

353. பாவாய் உறுகுழல் போல் - பஞ்சுநூற்பாவின்கண்ணுற்ற குழல் போல; "பாவி னூடுவன் குழலெனத் திரிதலைப் பாராய்" (பிரபு. வசவண்ணர். 12.) பா ஆய் - பாக்களை ஆய்தற்கு இடமாகிய. தேரும்படி பயின்றது எங்கென இயைக்க. என் பாவாய் - என்னுடைய பாவையே; தலைவி விளையாட்டுப்பாவையைநோக்கிக் கூறியது. முத்தன்னம் - முத்தாகிய அன்னத்தை. பாதத்தை மண்ணிற் பதியச்செய்து நடந்துவா. என் பாவாயென்பது முதலியன தலைவியின் கூற்றை நற்றாய் கொண்டுகூறியவை. என் பைங்கிளி பயின்றது எங்கு.

354. சுனையில் தவளை தத்தின். செல் - மேகம். மத மா - யானை. யா முறித்து உண்ணல் - யாமரத்தை முறித்து உண்ணுதலை; "உரற்கா லியானை யொடித்துண் டெஞ்சிய, யா" (குறுந். 232.) அதிர்வுற்று - நடுக்கமுற்று.

355. புரகரர் - புரங்களை அழித்தவர். பரிதவிக்க - துன்புற. பஞ்சின் னைவார். விரகு அறி - உபாயத்தை அறிந்த. அரகர - இரக்கக் குறிப்பு; 330-ஆம் செய்யுளின் குறிப்புரையைப் பார்க்க. கிளி அரகர என்ன; என்ன - என்று சொல்ல; "என்னனை போயினள் யாண்டையள் ளென்னைப் பருந்தடுமென், றென்னனை போக்கன்றிக் கிள்ளையென் னுள்ளத்தை யீர்கின்றதே" (திருச்சிற். 231) என்பது இங்கே கருதற்பாலது.

செவிலி ஆற்ருத்தாயைத் தேற்றல்.

356. மஞ்சிவர் மன்றமுஞ் செய்குன்ற முஞ்செறி வண்கலைசை
நஞ்சினை மாந்துங் கலசத் தியாகர் நடஞ்செய்பதத்
தஞ்சிலம் போசை படர்தரு மெல்லை யளவுஞ்சென்றுன்
வஞ்சியைத் தேடிக் கொணர்வேன் வருந்தல் வருந்தலன்னே. ()

ஆற்றிடை முக்கோற்பகவரை வினுதல்.

357. வான்மூன்று நூலர் கலைசைத் தியாகர் வரையிலெங்கள்
மான்மூன்று சத்தி யுடையா னொருவன்பின் வன்மரங்கள்
நான்மூன்று ராசியுந் தோயுங் கடத்தி னடந்தனளோ
கோன்மூன்று கொண்டு குறும்பொரு மூன்றுங் குமைத்தவரே.

மிக்கோர் ஏதுக்காட்டல்.

358. வேயுங் கரும்பும் புரைநெடுந் தோளி வினைப்பயனுற்
காயுங் கனியும் பருவத் தருந்துநர் கைப்படுமால்
தீயு மறியுங்கைக் கொண்டார் கலைசைத் தியாகர்வெற்பில்
ஆயும் பொழுதமின் னுருமந் நீர்மைய ரன்பினர்க்கே. (கசு)

செவிலி எயிற்றியோடு புலம்பல்.

359. துகளேத நீக்குங் கலைசைத் தியாகர் சுடர்க்கிரிமேல்
உகளேறு போது மடலோர் விடலைபின் னூறுமினி
யகளேயும் பூமின்புற் பற்கோத்த தாலி யணியுமெயின்
மகளேயிப் பாலைவந் தப்பால் நடந்த வழியுரையே. (உ0)

356. பதத்து......எல்லை: “உலகெலாம்......மலர்சிலம்படி” பெரிய.1.

357. வால் - வெண்மையான. மூன்று சத்தி - உச்சாக சத்தி, பிரபு சத்தி, மந்திரசத்தி; பு. வெ. 225-ஆம் செய்யுளுரையைப் பார்க்க; சத்தி - ஆற்றல். நான்மூன்று ராசி - பன்னிரண்டு ராசிகள். குறும்பு ஒரு மூன்றும் - காமம், வெகுளி, மயக்கமாகிய மூன்று குற்றங்களையும்.

358. மறி - மானை. மின்னுரும் அந்நீர்மையர்: “எறித்தரு” (கலி. 9) என்னும் செய்யுளின் தாழிசைகளைப் பார்க்க.

பி-ம். ‘அருந்துநர் கைக்கொள்வராற்’

359. ஏறு - காளை; ஆண்சிங்கமுமாம். ஊறும் இனிய கள் எயும் பூ மின்; திருமகள்போன்ற தலைவி: எழுவாய். புற்பற்கோத்த தாலி-புலிப்பல்லைக்கோத்த தாலி; “புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி.....கானவன் மகளே” அகநா. 7.

செவிலி குரவோடு புலம்பல்.

360. கூசாம லேதிலன் பின்னேக லென்றென்று கூறலின்றிப்
பேசாத பாவையைப் பெற்றன மென்ற பெருங்குறையால்
வேசாறி யோவெங்கள் பாவையை நீவிலக் காமல்விட்டாய்
தேசார் கலைசைத் தியாகேசர் வெற்பிற் செழுங்குரவே. (உக)

செவிலி சுவடுகண் டிரங்கல்.

361. பிஞ்சு நிலாவணி செஞ்சடை யாரென் பிழைமலங்கள்
அஞ்சுங் கழித்த கலைசைத் தியாக ரசலத்திறுன்
கொஞ்சுங் கிளியனை யாளடி யுங்குவை கூர்வடமேற்
றுஞ்சு மவனனை யானடி யேபிச் சுவடுகளே. (உஉ)

செவிலி கலந்துடன்வருவோரைக் கண்டு கேட்டல்.

362. கம்மேக வண்ணனுஞ் செய்யாளும் போல்வந்த காட்சிதந்தீர்
இம்மே தகறும்முன் போயின ரோகல் லெழிற்கலைசைச்
செம்மேனி பூசம்வெண் ணீற்றன் சிதம்பர தேவன்வெற்பில்
அம்மே னகையனை யாளு மொருசிலை யாளியுமே. (உங)

360. ஏதிலன் - அயலான். ஏகல் - போகாதே. பேசாத பாவை யென்றது குரவமரத்தின்பூவை (ஐங். 344.) வேசாறியோ - சலித்தோ. கூறலின்றி விட்டாயென இயைக்க. தேசு - ஒளி.

361. பிஞ்சு நிலா - பிறை; “மாமதிப் பிஞ்சுமிரை தேர்குயிற் குஞ்சும்” (மதுரைக்கலம்பகம், 80.) மலங்கள் அஞ்சு - ஆணவம் முதலியன. நான் கொஞ்சும். அடிகள் உங்கே தோன்றுகின்ற உவைகள். வடம் - ஆலிலை; ஆகு பெயர். துஞ்சும் அவன் - திருமாலை.

362. கம் மேகம் - நீரையுடையமேகம். இம்மேதக - நம்மைப்போன்ற மேன்மை தக; “மீண்டா ரெனவுவந் தேன்கண்டு நும்மையிம் மேதகவே, பூண்டா ரிருவர்” (திருச்சிற். 244.) அம்மேனகை - அந்த மேனகையை.

கலந்துடன்வருவோர் புலம்பல் தேற்றல்.

363. கண்டகங் கொண்டென் னெதிர்வந்த மேகமுங் காதலென்மான்
கண்டதோர் மின்னுங் கணிக்கிலன் னேயொண் கரியமணி
கண்டன் சிதம்பர வீச னுதற்கட் கனறருகான்
கண்டகண் டண்ணுற வேகல சாபுரி காண்பர்களே. (௨௪)

செவிலி புதல்வியைக் காணாது கவலைகூர்தல்.

364. தெரிதமி ழார்ந்த கலைசைத் தியாகரைச் சேர்கிலர்போல்
எரிதரு கான்றிரிந் தெய்த்தவென் கால்கலந் தெருகரைத்
துரிதம தாக்கண்டு கண்டிகள் புற்கென்ற சூரியர்க்கும்
அரிதரி தாலினிக் காணகம் மாதை யருஞ்சுரத்தே. (௨௫)

௨௧. மீட்சி.

தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்கு உணர்த்தல்.

365. தத்துவக் கூட்ட முழுவதுஞ் சோதித்துத் தாகமுடன்
சித்துரு வான கலைசைத் தியாகரைத் தேடுநர்போற்
பத்துடை யாளையன் னேயெங்கு நாடியிப் பாவிவந்தேன்
ஒத்துடன் கொண்டுசென் றனொரு வள்ளறன் னூர்மனைக்கே.

---

363. கண்டகம் - கத்தி. மேகமென்றது தலைவனை. மின்னென்றது தலைவியை. கான் கண்ட கண் தண்ணுற - காட்டைக்கண்ட கண்கள் குளிர்ச்சியை அடைய. "கண்ணிநீர் சென்னி யெமரவ ராபவேல், எண்ணிய வெண்ண மெளிதரோ - எண்ணிய, வெஞ்சுட ரன்னானை யான்கண்டேன் கண்டாளாம், தண்சுட ரன்னாளைத் தான்" திணைமாலை. 89.

364. என் கால் எய்த்த - என் கால்கள் இளைத்தன. துரிதமதா - விரைவாக. புற்கென்ற - புல்லியவாயின; "வாளற்றுப் புற்கென்ற கண்ணும்" (குறள், 1261;) "காலே பரிதப் பினவே கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந் தனவே" குறுந். 44.

365. தாகமுடன் - விருப்பமுடன். சித்து - அறிவு. பத்து - அன்பு; "பத்துடையீ சன் பழவடியீர்" திருவாசகம்.

தலைவன் தம்மூர்சார்ந்தமை சாற்றல்.

366. எழுங்காதல் கூரமுன் னுளனன்னை நான்கண்ட திம்மலைவண்
டெழுங்கான் மலர்நந்தி யோடைத் துறையிதுன் னூசலிட்ட
செழுங்கா விவைதென் கலைசைத் தியாகரைச் சேர்கிலர்போல்
அழுங்கா தெழுந்தரு ளாரணங் கேநம் மணிநகர்க்கே. (௨)

தலைவி முன்செல்வோர்தம்மோடு தான்வரல் பாங்கியர்க்கு உணர்த்தி விடுத்தல்.

367. ஊரார்சொற் றீமைக்குந் தாயர் பொறுமைக்கு முங்கொதுங்கி
வாராநின் றுளொரு வள்ளல்பின் னென்றுநன் மாமறையீர்
ஏரார் கலைசைத் தியாகேசர் வேதண்டத் தெண்டிசையும்
பாராநின் றேங்குமென் பாங்கியர்க் கோதுந்தப் பாதுசென்றே.

முன்சென்றோர் பாங்கியர்க்கு உணர்த்தல்.

368. குருவாய்வந் தன்பர்க்கு மூப்பொருள் காட்டிக் குறைவிலின்பம்
தருவார் கலைசைத் தியாகர்நன் னாட்டொரு தையலங்கோர்
திருவாளன் பின்வரக் கண்டன நீரின்று சேயிழையீர்
பெருவாழ்விற் கண்டு வகைதொகை யின்றிப் பெறுவிர்களே. ()

பாங்கியர் கேட்டு நற்றாய்க்கு உணர்த்தல்.

369. மல்லோங் கெயில்சூழ் கலைசைத் தியாகர் வரையிடத்தஞ்
சில்லோதி நின்மக ளோர்தலைவன் னேபிரி தீங்கினென்னை
கொல்லோ வினையுமென் றேங்கிய நாமனு கூலமுற
நல்லோர் வருமென்று சொற்றிடக் கேட்டன நப்பதிக்கே. (௫)

---

366. கான்மலர் - வாசனையையுடைய மலர்; கான் - வாசனை.

367. வேதண்டத்து - மலையில்.

368. முப்பொருள் - பதிபசுபாசத்தின் இலக்கணங்களை. உவகையைப் பெறுவீர்கள். தொகை - அளவு.

369. மல் - வளம். அம் சில் ஓதி - அழகிய சிலவாகிய கூந்தலையுடைய; "வெஞ்சின விறல்வேற் காளையொ, டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே" (ஐங்குறு. 391.) பதிக்கு வருமென்று; பதிக்கு - பதியின்கண்.

நற்றாய் கேட்டுத் தலைமகனுளங்கோள் வேலனை வினாதல்.

370. நற்றயல் பாகர் கலைசைத் தியாகரை நாடியெல்லாம்
கற்றறி வேல கடுஞ்சுரம் போய்வருங் காதலவன்
உற்றவென் பொன்னையென் னில்லங் கொணருங்கொ லூழிற்றன்னைப்
பெற்றநற் றாய்தன் மனையுய்க்கு மோசொல் பிழையின்றியே. ()

உச. தன்மனை வரைதல்.

பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற் சேவிலியை வினாதல்.

371. தீவண மேனிச் சிதம்பர வீசர் திருக்கலைசைப்
பூவண மாளைநகும் மாமனைக் கேவந்து பூஞ்சிலம்பார்
காவண மிட்டுக் கலியாணஞ் செய்தற்கென் கண்ணனையாய்
ஆவணஞ் சென்றினிக் கூறினென் னாங்கவ ரன்னையர்க்கே. (க)

சேவிலிக்கு இகுளை வரைந்தமை உணர்த்தல்.

372. எம்மின்ன னீர்க்குஞ் சிதம்பர வீச ரெழிற்கலைசை
நம்மினத் தார்க்குநற் றாய்க்குமன் னேயென்னை நாஞ்சொல்லுவோம்
அம்மின் னிடைமட வாளைநன் னாளி லதுலரவர்
தம்மின் மணம்புணர்க் தாரென்று தூதர்கள் சாற்றினரே. (உ)

---

370. தயல் - தையல்: முதற்போலி; "தயல்வளர் மேனிய னம்பலத்தான்" (சிற். 117.) கொணரும் கொல் - கொணர்வானோ. ஊழின் - முறையாக.

371. பூவண்ணம் - பூப்போலும் வண்ணத்தையுடைய. காவணம் - பந்தலை. ஆவணம் - ஆகும்வண்ணம். ஆங்கவர்: ஒருசொன்னீர்மைய. அன்னையர்க்குக் கூறின் என்?

372. இன்னல் - துன்பங்களை. அம் மின் - அழகிய மின்னலைப் போலும். அதுலர் அவர் - ஒப்பில்லாதவராகிய தலைவர். தம் இல் - தம்முடைய வீட்டில்.

வரைந்தமை சேவிலி நற்றாய்க்கு உணர்த்தல்.

373. உற்றார்கள் வந்துநின் றூற்ற மணநல மூங்கணெய்தப்
பெற்றா யிழைதென் கலைசைத் தியாகர் பிறங்கலன்னே
நற்றாயைக் காணிய விம்மனைக் கேயந்த நாதன்பின்னே
பற்றாய் வருவளென் றுற்றார்முன் வந்து பகர்ந்தனரே. (௩)

தலைவன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கியம்பு சென்றேன்றல்.

374. கங்கைச் சடையர் கலைசைத் தியாகர் கமலமலர்ச்
செங்கைத் தழல்புரை தீமுன்ன ரெல்லாச் சிறப்புமுற
மங்கைக் கியான்மங் கலநாண் புனைந்தது வார்குழலாய்
சங்கைப் படாதுன் றமரான யாவர்க்குஞ் சாற்றுகவே. (௪)

தானது முன்னே சாற்றினன் என்றல்.

375. பாண்டரங் கஞ்செய் கலைசைத் தியாகர் பழமலைமேல்
ஆண்டகை யாயெம் மணங்கைக்கொணர்ந்துன் னணிமனைவாய்க்
காண்டகு முன்பெருங் கேண்மூன்னர் நீமங் கலத்திருநாண்
பூண்டதன் றேயறிந் தன்னைக் கியம்பினன் பூரிக்கவே. (௫)

உரு. உடன்போக்கிடையீடு.

நீங்குங் கிழத்தி பாங்கியர்தமக்குத் தன் சேலவுணர்த்திவிடுத்தல்.

376. உத்தமர் போற்றுங் கலைசைத் தியாக ருயர்வரைமேல்
நத்தம ரத்தனை யொத்தவிக் காளைபின் னான்வனத்தில்
வித்தக மாக நடக்கின்ற வாறு விரைந்தந்தணீர்
சித்த மருண்டழு மென்னாய முன்சென்று செப்புமினே. (க)

---

373. உங்கண் - அவ்விடத்தே. காணிய - காணும்பொருட்டு. நாதன் - தலைவன்.

374. புனைந்ததைச் சாற்றுக.

375. பாண்டரங்கம் - திரிபுரத்தை எரித்தபின்பு இறைவன் ஆடிய கூத்து; இதன் இலக்கணத்தைக் கலித்தொகை முதற்செய்யுள் 8-10-ஆம் அடிகளாலும், "ஏறமர் கடவுள்" என்னும் அதன் மேற்கோளாலும் உணர்க. பழமலை - விருத்தாசலம். பூரிக்க - மகிழ.

376. நத்து அமர் அத்தனை - சங்கம்பொருந்திய கையையுடைய திருமாலை. காளை - பாலைநிலத்தலைவன். வனம் - பாலைவனம். என் ஆயத்தின்முன் சென்று.

தலைமகள் தன்செலவு ஈன்றாட்கு உணர்த்திவிடுத்தல்.

377. பாரேழுந் தந்த கலைசைத் தியாகர் பதம்பணிந்தே
ஓரேழ் பிறப்பு மொழிதவத் தீரும்மை யான்றொழுவேன்
போரே றனைய வினைகழ லானொடு பொங்கழற்கான்
தேரேறிச் செல்வதெந் தாய்க்கன்ப னேசென்று செப்புமினே. ()

நற்றாய்க்கு அந்தணர் மொழிதல்.

378. மயலேறு சிந்தை மலைகிழ வோயிள மானனையாள்
இயலே றரைய னொருவன்பின் னேகடத் தேகினள்காண்
புயலேறு மாடக் கலைசைத் தியாகப் புனிதனருட்
செயலேயல் லாற்பின்னை வேறில்லை யென்றிரு தேற்றமுற்றே. ()

நற்றாய் அறத்தொடுநிற்றலிற் றமர் பின் சேறலைத்
தலைவி கண்டு தலைவற்கு உணர்த்தல்.

379. மாயம் புகுந்த மனத்தர்க் கரியர் மலமகன்றோர்
சேயம் புகுந்த கலைசைத் தியாகர் நெடும்பொருப்பா
சாயஞ் சிலையொடு நாணேறி யேற்றொடுந் தாயுடனே
வாயம்பு பெய்முகில் பொற்றேர் மலையை வளைக்கின்றதே. (ச)

தலைவியைத் தலைவன் விடுத்தல்.

380. தெழியா வருபடைக் கானவ ரேலவர் தீக்குயிர்வேல்
விழியாய் நடுக்கப் பகழி யொன்றினில் வீட்டிடுவேன்
ஒழியா துறுநும ரேற்கொலைக் கஞ்சுவ லோர்ந்துசெல்க
அழியாத சீர்த்திக் கலைசைத் தியாக ரணிவரைக்கே. (ரு)

---

378. அரையன் - அரசன். இரு - இருப்பாயாக.

379. மாயம் - வஞ்சனை. சாய் - வளைந்த. சிலை - வில், இந்திரவில். ஏறு - இடி, நாணேறியாகிய ஏறு. தாய் - தாவி. அம்பு - பாணம், நீர். முகிலென்றது தமர்களை. தேராகிய மலையை.

பி-ம். 'நாணேறி யென்னுந் தடித்துடனே'

380. தெழியா - முழக்கி. கானவர் - மறவர். நடு க பகழி - நடுவில் நகரத்தையுடைய பழி; பகழி - அம்பு.

தமருடன் செல்பவள் அவன்புறநோக்கிக் கவன்று அரற்றல்.

381. விரவிய பேமற வெற்புறங் காத்தலின் விண்ணுமண்ணும்
பரவிய தாளர் கலைசைத் தியாகர் பழமறையாம்
புரவியின் வாழிய வெம்மையர் தோன்றப் புறங்கொடுத்த
திரவிய மாமலை போற்புய வீரன்பொற் றேர்ப்பரியே. (௬)

உக. வரைதல்.

அந்தணரையுஞ் சான்றோரையும் முன்னிட்டு
வரைந்துகொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல்.

382. சகநாத ரெங்கள் கலைசைத் தியாகர்தந் தண்டகநாட்
டகநா யகனென யார்மணம் வேட்டவ ராய்ந்திடினன்
முகனா ரெனமறை யோராசி கூறலின் மொய்ம்பினிவன்
குகனா விவடெய்வ யானையு மாக்கண்டு கொண்டனமே. (க)

உஎ. இல்வாழ்க்கை.

தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்.

383. நன்னுதற் பாவையுன் வல்லவ நீர்மையை நானென்சொல்வேன்
மின்னுதற் கண்ணர் கலைசைத் தியாகர் வியன்கிரிமேல்
என்னுழைப் பால்வந்த தென்னையந் நாண்முத லின்றளவும்
உன்னுழைப் பாலல்ல வோபெற் றனோமிந்த வூதியமே. (க)

---

381. பேம் அற - அச்சம் நீங்க. எற்புறங்காத்தலின் - என்னைப் பாது காத்தலினால். புரவியின் - குதிரையைப் போல. ஐயர் - தமையன்மார். திரவிய மாமலை - மேரு; திரவியம் - பொன். தேர்ப்பரி வாழிய வென்க.

382. தண்டகநாடு - தொண்டைநாடு. நாயகனென்றது தலைவனை. மறையோருக்கு நான்முகன் உவமை.

383. மின் நுதல் - மின்னுகின்ற நெற்றி. என் உழைப்பால். என்னை - யாது? ஊதியம் - இலாபம். இந்த ஊதியத்தை உன் உழைப்பாலல்லவோ பெற்றனோம். தலைவியையும் உளப்படுத்திக் கூறினமையின் பெற்றனோமென்றான்.

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

384. மூவா மருந்தென்ன முன்சொன்ன வஞ்சின முற்றுவித்தே
ஓவா வலருட னென்கட் புனலு மொழித்தனையால்
காவார் கலைசைத் தியாகேச ருஞ்சிவ காமியும்போல்
நீவாழி யெம்பெரு மானிவ ளோடென்று நீணிலத்தே. (௨)

வரையுநாளளவும் வருந்தாதிருந்தமை பாங்கி தலைவியை வினுதல்.

385. அந்தமி ழின்சுவை போன்மொழி யாய்மன்ற லாற்றுபரி
யந்தமெவ் வாறெவ்வ மாற்றி யிருந்தனை யன்றுவந்த
அந்தகற் காய்ந்த கலைசைத் தியாகருக் கன்பிலர்தாங்
கந்தமில் பாவப் பொறையின்மின் னார்சொல் லலர்சுமந்தே. (௩)

தலைவி வருந்தாதிருந்ததற்குக் காரணம் கூறல்.

386. அற்புதக் கூத்தர் கலைசைத் தியாகர்மெய் யஞ்செழுத்தாம்
சொற்புணை யாலன்பர் துன்பக் கடலைத் தொலைப்பதுபோல்
நற்பிணை யற்குழ லாய்துயர் வெள்ளநம் மன்பர்தந்த
கற்புணை யாலுநின் சொற்புணை யாலுங் கடந்தனனே. (௪)

பாங்கி தலைவனை வரையுநாளளவும் நிலைபெற ஆற்றியநிலைமை வினுதல்.

387. படைகொண்ட கையர் கலைசைத் தியாகரைப் பற்றினர்போற்
றொடைகொண்ட கோதையைநீயின்றைவாயி லுந்துய்த்திடலாற்
புடைகொண்டு பண்டு பிரியுந் தொறுமப் பொழுதிடையில்
விடைகொண்டதோநின்றதோவிவண்மேல்வைத்தவேட்கையதே.

---

384. மூவா மருந்து - உண்டவர் மூவாமைக்குக் காரணமாகிய மருந்து. அலரையும் என்கண்ணீரையும் ஒழித்தனை.

385. அம் தமிழ். ஆற்றுபரியந்தம் - செய்யுமளவு. எவ்வம் - துன்பத்தை. தாங்கு பாவமாகிய பொறை; பொறை - பாரம்.

386. அஞ்செழுத்தாம் சொற்புணை: "அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை" (திருவா.) பிணையல் - மாலை. கல் புணை - தலைவன் கையுறையாகத் தந்த மாணிக்கமாகிய தெப்பம்; "பார் வியப்புற நீர்தந்த மாமணி" (அருணைக்கலம். 100.) வெள்ளத்தைக் கடந்தனன்.

387. இன்று ஐ வாயினும் - இக்காலத்தில் ஐம்பொறிகளாலும்; "கண்டு கேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள" குறள்.

பாங்கி மணமனைச்சென்ற செவிலிக்கு இருவரன்பும் உணர்த்தல்.

388. ஏக னநேகன் சிதம்பர வீசன் கலைசையினம்
மோகன வல்லி முலைமுகை காட்டி முகமலர்ந்து
பாகம் பதிந்திதழ்த் தேன்றா லலன்னை பார்த்திபன்றான்
ஆகங் குளிரவண் டாயுண் டுவக்கு மனுதினமே. (௬)

பாங்கி இல்வாழ்க்கை நன்றென்று செவிலிக்குரைத்தல்.

389. காளிதன் கேள்வர் கலைசைத் தியாகர் கருணைமலர்த்
தாளித மாத்தொழு வார்க்கன மூட்டித்தற் காத்துநின்வேய்த்
தோளிதற் கொண்டவற் பேணி யவரைச் சுவைதருபாற்
பாளித நாளு மிசைவித்துப் பூரிக்கும் பான்மையளே. (௭)

மணமனைச்சென்றுவந்த செவிலி பொற்றொடி கற்பியல் நற்றாய்க்கு உணர்த்தல்.

390. சிவமுத லாந்தென் கலைசைத் தியாகர் சிலம்பினின்மான்
அவமுந் திரியு முறுமனை வாழ்க்கைக்கற் பாற்கிரக
நவமுநன் றாகவென் றுணன்மை யேதரு நந்தியபா
தவமுந் தழைகவென் றூற்றளிர் தோன்றித் தழைத்திடுமே. ()

---

388. முகை - அரும்பு. பாகம் - பக்கம், பக்குவம். இதழ் - கீழுதடு, மடல். அன்னை: விளி. தலைவியை வல்லியென்றதற்கேற்ப, முகை மலர்தல் இதழ்த்தேன் வண்டு என்பன கூறப்பட்டன.

389. தாளை இதமாக. "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (குறள்.) அவரை - தலைவரை. பாற்பாளிதம் - பாற்சோறு. மிசைவித்து - உண்பித்து.

390. சிவமுதலாம் - முத்திக்கு முதலாகிய. சிலம்பில் தின்மான், அவம் முந்திரியும் உறு - வினைசெயல் முந்திரியளவும் உறாத. கிரகநவமும் - ஒன்பது கிரகங்களும். நந்திய - வாடிய. பாதவமும் - மரமும்.

செவிலி நற்றாய்க்கு நன்மனைவாழ்க்கைத்தன்மை யுரைத்தல்.

391. அல்லாருங் கண்டர் கலைசைத் தியாக ரசலத்திலுன்
இல்லாரும் வாழ்வினி னல்லாண் மனைச்செல்வ மெண்மடங்கால்
நல்லாய் நினக்கன்ப னீயானைப் பானுமந் நாதனம்மான்
எல்லாளில் வேலை வருவார்க் கடுவ திடுவதுமே. (௯)

செவிலி நற்றாய்க்கு இருவர்காதலையும் அறிவித்தல்.

392. பின்னுஞ் சடையர் கலைசைத் தியாகர் பிறங்கலன்னாய்
பொன்னும் பணியு மிருள்வெளி சொற்பொருள் போற்பிறர்கள்
உன்னு மபேத முதன்மூன்று மன்றிநம் முத்தமியும்
மன்னும் பிரிவின்றி யேயொன்ற தாயுற்று வாழ்குவரே. (௧0)

௨௮. பரத்தையிற்பிரிவு.

காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏது இதாமவ் விறைவிக் கென்றல்.

393. தண்ணாறு சூடுங் கலசத் தியாகர் தடங்கலைசை
உண்ணால் வகையுறப் போடும் பவனிநல் லூரன்வரப்
பண்ணா லவிநயஞ் செய்மாதர் கொங்கை யிபங்களிற்றன்
கண்ணான பாகுற லாலாகு மாதயர் காரணமே. (௧)

---

391. உன் இல்லாரும் வாழ்வினின் - உனது இல்வாழ்க்கையைக் காட்டிலும். நல்லாள் - தலைவியினது. மடங்கால்; ஆல்: அசை. நினக்கன் பன் அந்நாதனையும், நீ அந்த மானையும், யான் எல்லாளையும் ஒப்பாதும்; அன்பன் - தலைவியின் தந்தை, நாதன் - தலைவன், மான் - தலைவி, எல்லாள் - தோழி. வருவார்க்கு அடுவதும் இடுவதுமே இல்வேலை.

392. பணி - ஆபரணம். பொன்னும் பணியும் அபேதத்திற்கும், இருளும் வெளியும் பேதத்திற்கும், சொல்லும் பொருளும் பேதாபேதத்திற்கும் உவமைகள். ஒன்றதாய் - ஒன்றாய்; அது: பகுதிப்பொருள்விகுதி. உத்தமி - தலைவி. மன் - தலைவன்.

393. கலைசையுள். நால்வகையுறப்பு - யானை முதலியவை. மாதர் - பரத்தையர். கொங்கையாகிய இபம்; இபம் - யானை. கண்ணான பாகு; பாகு - பாகன். மாது - தலைவி. காரணம் ஆகும்.

தனித்துழி இறைவி துனித்து அழுதிரங்கல்.

394. பந்தத்தை நீக்குங் கலைசைத் தியாகரைப் பற்றிலர்போற்
சந்தத் தடவரை மார்போன் பிரியத் தனித்திரங்கிக்
கந்தற் றழுதங்கந் தங்கம தாகவிக் கங்குலென்போல்
இந்தத் துயருறு வாருமுண் டோசில ரேழையரே. (௨)

ஈங்கிது வென்னெனப் பாங்கி வினாதல்.

395. நவசத்தி கட்கு முரியோன் சிதம்பர நாதனருட்
சிவசத் தமலன் கலைசைநல் லூரன் றினமுமன்பாம்
கவசத்தை யிட்டெனைக் காக்கவு நீவன் கலக்கஞ்செய்வி
திவசப்பட் டேங்குநர் போற்றேம்பு மாறென் றிருநுதலே. (௩)

இறைவன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல்.

396. அஞ்சா னனங்கொள் கலைசைத் தியாகருக் கன்புசெய்யார்
நஞ்சா லெனவிங்கு நானைய மார்ப நயந்தளித்தான்
செஞ்சாலி சாய்தர மேதிப் பகட்டினஞ் சென்றயலே
பைஞ்சா யருந்தும் வயலூரன் சேரிப் பரத்தையர்க்கே. (௪)

தலைவியைப் பாங்கி கழறல்.

397. ஓங்கார ரூபர் கலைசைத் தியாக ருயர்வரைதன்
பாங்காருங்கார்வறுங்கான்போய்ப்பொழிந்துபின்பாங்குறினும்
தோங்காணு மாறுள தோவணங் கேநந் துணைவரிந்நாள்
ஆங்காடு நீரிஃ தென்றனின் கற்புக் கழகல்லவே. (௫)

---

394. சந்தம் - சந்தனம், அழகு. கந்து - பற்றுக்கோடு. அங்கம் தங்கமது ஆக - உடம்பு பசலைபூப்ப. கங்குலில்.

395. நவம் - ஒன்பது. அமலனது. விதிவசப்பட்டு.

396. அஞ்ச ஆனனம் - ஐந்து திருமுகங்களை. நஞ்சாலென - கைந்தாற் போல. நான் நையும்படி. சாய் - ஒருவகைக் கோரை. துறைசைக்கோவை, 399, பார்க்க.

397. தன் பாங்கு - தன் பக்கத்தில். தோம் - குற்றத்தை. நீர் - தன்மை. என்றல் அழகல்ல.

தலைவி செவ்வணி அணிந்து சேடியை விடுப்புழி அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல்.

398. கலத்தினி னாட்டுங் கலசத் தியாகர் கறங்கலைசைத்
தலத்தினின் மேவுந் தளிசிய லீரறந் தாங்கியதொல்
குலத்திருக் காவினிற் றோன்றிய தோர்கொடி கூறுமிவ்வூர்ப்
புலத்தினி லெங்கு மலரேறப் பெற்ற புதுமையென்னே. (௬)

பரத்தையர் கண்டு பழித்தல்.

399. ஆரிய ரெங்கள் கலசத் தியாக ரருட்கலைசை
யூரியற் செவ்வ லரிமாலை நீலங்க ளோடலரா
நேரிய வண்டின் குழாஞ்சுமந் தேமுன் னிலவுதல்போற்
சேரியின் வாய்வந்து நின்றா ரிறைமனைச் சேடியரோ. (௭)

பரத்தையர் உலகியல் நோக்கி விடுத்தலின் தலைமகன் வரவுகண்டு உவந்து வாயில்கள் மொழிதல்.

400. காவும்பர் பம்புங் கலைசைத் தியாகர் கருணையைப்போல்
மேவும் பிராட்டி விடுமேவன் மாதரை வித்தமிக்க
வாவும் பரத்தையர் சேரியிற் கண்டு மணிகொழித்துத்
தாவுந் திரைப்புன லூரன்வந் தான்பெருந் தன்மையிதே. (௮)

தலைமகன்வரவு பாங்கி தலைவிக்கு உணர்த்தல்.

401. பணமா சுணத்தர் கலைசைத் தியாகர்க்கன் பற்றவர்போல்
மணமாலை மார்பர் புறத்தா றுறினும் வழாமலொரு
கணமாத் திரையினிற் றேர்மீது வந்துன் கடையினின்றார்
குணமா வதுகொடி யேதுறை நீர்க்கெதிர் கொள்வதுவே. (௯)

---

398. குலமாகிய பெரிய சோலையில். கொடி - கொடிபோல்வாள். அலர் - பழிமொழி, மலர்; கொடியென்றதற்கேற்ப அலர் கூறப்பட்டது.

399. நீலங்களென்றது கண்களை. வண்டின் குழாமென்றது கூந்தலை. இறை - தலைவனது. சேடிக்குச் செவ்வலரிமாலை யுவமை.

400. கா - சோலை. உம்பர் - மேலிடத்தில். பம்பும் - பரவும். பிராட்டி - தலைவி. வித்தம் - பொன்னை. மிக்கு அவாவும்.

401. மார்பர் - தலைவர். புறத்தாறு - பரத்தையர்சேரியிடத்து. கணம் - க்ஷணம். கடையில் - வாயிலில். எதிர்கொள்வது குணம்.

தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல்.

402. ஆடல்வை வேலன்பர் சேர்ந்திடி னின்ப மலபிறவா
வாடலிங் கியானுற நீங்கின் வயாவும் வரம்பிலவாம்
கோடலங் கையாய் கலைசைத் தியாகரைக் கூடலர்போல்
ஊடலெவ் வாறெனக் கெய்தும் பசலை யொளிக்கையிலே. (௧௦)

புணர்ச்சியின் மகிழ்தல்.

403. அந்நாட் கலைசைத் தியாகே சருமற் றரியயனும்
மின்னார் பலர்தமைக் கொண்டின்ப மெய்தினர் மேவொருத்தி
தன்னாற் சுகமமை யாமலன் றேவித் தனிக்கொம்பர்வாய்
இன்னா ரமுதமுண் டானந்த மேவிட் டிருந்தனனே. (௧௧)

வெள்ளணி அணிந்து விடுத்தல்.

404. தோயுந்தண் பாலி நுரையா மெனும்வெள்ளைத் தூசுபுனைந்
தாயுங்கற் பாரமுத் தாரமுஞ் சூடி யநங்கனறக்
காயுங் கனற்கட் சிதம்பர வீசர் கலைசையின்கட்
சேயுத யஞ்சொல வூரனுக் கோடினர் சேடியரே. (௧௨)

வெள்ளணி அணிந்து விடுத்துழித் தலைமகன் வாயில்வேண்டல்.

405. மலவிகன் மாற்றுங் கலைசைத் தியாகரை வாழ்த்துமென்பாற்
சிலவித னங்களைப் பாராட்டி யின்று சிறக்கணிக்கும்
புலவியை நீவணங் கித்தணி சென்றுநின் போதனையால்
நிலவிய நற்குண நற்செய்கை மிக்க நிரைவளைக்கே. (௧௩)

---

402. ஆடல் - வெற்றி. இன்பமல - துன்பங்கள். பிறவா - உண்டாக மாட்டா. யான் வாடல் உற. வயா - வருத்தம். கோடல் - செங்காந்தள். பசலை - பிரிவால் வேறுபட்ட நிறம்.

403. அன்றே எய்தினர். இனிய அரிய அமுதத்தை; வாயமுதம். பி-ம். 'மின்னா ரிருவரைக்'

404. பாலி - பாலாறு. கற்பு ஆரம் - முல்லைமாலை. அநங்கன் - காமன். சேய் உதயம் - பிள்ளை பிறந்ததை. ஊரனுக்குச் சொல்ல ஓடினர்.

405. மல இகல் - மலத்தின் வலியை. விதனங்களை - வியசனங்களை. சிறக்கணிக்கும் - பார்வை சுருங்கும்; (குறள், 1095.) போதனையால் தணி.

தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல்.

406. கடல்வண்ண னேத்துங் கலைசைத் தியாகர் கருணையினால்
அடலயில் வேற்கண்ணி பாலற் பயந்துநெய் யாடினளால்
திடமுற வாங்கவண் மெய்யாற வேண்டுஞ் செறிதுனியும்
மிடலுடை யாவென்றி வீரா தணியவும் வேண்டுமின்றே. (கசு)

தலைவன் தன்மனத்து உவகைகூர்தல்.

407. செங்கையி லாடுங் கலைசைத் தியாகர்பொற் சேவடியை
அங்கையி னுற்றெழு நானின்று காண்ப னமுதிறைக்கும்
கொங்கையு மேந்து குழவியு நெய்யிட்ட கோலமும்பூ
நங்கைத னீர்மையும் பச்சடம் பான நலத்தையுமே. (கரு)

தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்.

408. உலகாள மைந்தன் பிறந்தன னென்னுமு னொல்லைவந்துன்
இலகா டகமனை வாயினின் றுருந் னிடத்தைவிட்டு
விலகாநின் றுலுங் கலைசைத் தியாகர்தம் வெற்பினல்லோர்
நலகால் விருப்ப மொழிவர் கொலோவெங்க ளுயகியே. (கசு)

தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தல்.

409. கலைப்பா வலர்சூழ் கலைசைத் தியாகரைக் காண்டகுநீர்
விலைப்பா வையர்மனைக் கேபோ மவரிட்ட மென்களபம்
முலைப்பாலும் மார்பிடைப் பாயிற் கரையு முழுவது மென்
தலைப்பா லனையுஞ் சவலைய தாக்குத றக்கதன்றே. (கஎ)

---

406. பாலனைப் பயந்து. நெய்யாடினள் - எண்ணெய்தேய்த்து முழுகினள். துனி - புலவியின் நீட்டம். மிடல் - வலி. உடையாத வென்றி. துனி தணியவும்வேண்டும்.

407. செங்கை - திருவாதிரை நாளில்; "செங்கையாட்டினார்" (திருநாகைக் காரோணப்.) நான் இன்று காண்பன். அமுது - பால். பூநங்கைதன் - தலைவியின்.

408. ஒல்லை - விரைவில். இலகு ஆடகமனை வாயில்; ஆடகம் - பொன். நல்ல கால் விருப்பம் - நல்ல பிள்ளையினிடத்துள்ள விருப்பத்தை.

409. விலைப்பாவையர் - பரத்தையர். போம் - செல்வீர். களபம் - கலவைச்சந்தனம். உம் மார்பிடைப் பால் பாயின் களபம் முழுவதும் கரையும். சவலையதாக்குதலென்பது குறிப்பு; சவலை - சவலைக்குழந்தை.

51

பாழ்ப்பாமடத்துப் 373
பாற்றின 112
பாறுசூழ் 274
பானல்வாய் 507
பானுகிரணம் 309

பி

பிடித்தாரைக் 485
பிணிகிடந்தார்க்குப் 139
பிணியார் 37
பிழைத்தாரோ 335
பிள்ளைவயதினிற் 401
பிறந்தய்யக் 365
பிறப்பித்தோன் 91
பிறப்பென்னும் 41
பிறர்செல்வங் 510
பிறர்புலமென்னு 97
பிறவிக்கட 77
பிறைகாணுங் 32
பிறையணிந்த 14
பிறையார்நறு 300
பின்னொருகாலங் 283

பீ

பீடிக்செய்திக 78

பு

புக்குவிடை 263
புகலிரும் 3
புகழ்சூழ்ந்த 173
புகழ்மாது 176
புகார்மன்னன் 325
புகுவார்க் 138
புட்கரணி 251
புண்ணனந்த 144
புண்ணியன் 444
புணர்தல்பிரிதற் 472
புதியதுதீது 353
புதுவைச்சடையன் 337
புயல்காய்த்து 186
புயலுந்தருவும் 218
புயன்மேவு 257
புரசைவடமலை 303
புரந்தரதாரு 261, 498
புரவுதரு 499
புராதனமென்னும் 348
புரிந்தகலை 268
புல்லாதார் 139
புலமையிற் 412
புலவிபுறக் 132
புவியோர்பெறுங் 387
புற்றுறை 104
புறந்தந்திரு 511
புன்னைக் 129
புனவிலை 438
புனலுடர் 189
புனிற்றுப் 54
புனையும் 511

பூ

பூங்கமல 231
பூண்டபறை 17
பூண்டாக்கு 499
பூண்டாழ் 152
பூணை 12
பூணித்திலத்துப் 227
பூத்தாட்புறவிற் 105
பூதத்துணை 306
பூதம்பணி 216
பூதலத்து 186
பூதூரில்வங் 437
பூந்தண்சினை 46
பூந்தண்பொழில் 223
பூப்பாவைகோன் 277
பூமகள்புணர 257
பூமகள்யார் 18
பூமகனேமுத 50
பூமடக்கை 207
பூமருவிய 212
பூமலர்த் 214
பூமலர்வளர் 207
பூமலி 359
பூமலிமென் 470
பூமலைநீ 1
பூமன்றிருக் 21
பூமன்னுபதுமம் 182
பூமன்னுபாவை 176
பூமன்னுபொழில் 384

பூமாதிருங் 301
பூமாதுபுணர 181
பூமார்துவாழ் 490
பூமாலைமிடைந்து 178
பூமிசைவனிதை 220
பூமென்கணை 121
பூமேலா 242
பூவணைத்த 403
பூவார்பொய்கைப் 25
பூவிலயனும் 320
பூவேந்தர் 333

பெ

பெண்டிர்மதியார் 68
பெண்ணிணங்கிய 64
பெரியோருழையும் 65, 510
பெருக்கச்சிவந்திடுக் 429
பெருங்கடுங்கோன் 473
பெரும்பாவ 80
பெரும்புங்கவர் 393
பெருமாள் 367
பெருவயிறு 503
பெருவாழ்வு 443
பெற்றுளொரு 304

பே

பேணுகுமுத 506
பேதையர்பித்த 382
பேய்முலை 4
பேயோபெருங் 132
பேர்கொண்டு 393
பேராசர் 271
பேரறபத் 478
பேரோசைப் 263

பை

பைங்கண்வா 56
பைங்கணிளம் 505
பைங்குவளை 416

பொ

பொங்குசாமரை 36
பொங்குதமி 386
பொங்குமிடி 289
பொத்தகமு 29
பொத்தப்பிச் 264
பொதியி 332
பொதுமாதர் 261
பொய்கையருளான 280
பொய்யன்மின் 62
பொய்யாமொழியா 405
பொய்யினீங்குமின் 78
பொரடக்கயம் 304
பொரிப்புநறு 513
பொருசின 102
பொருதன்பி 406
பொருதுவடுப் 142
பொருந்தவொரு 185
பொருந்துபோதியி 57
பொருநெடுங் 196
பொருநைநதி 402
பொருப்பிற்கரிய 268
பொருமாகட 447
பொருவருமூ 108
பொருளில்குலனும் 68
பொருளைப் 76
பொருளொடு 79
பொலஞ்செய் 108
பொழிந்து 476
பொழிலே,இரவோரன்னவிருளிற் 507
பொழிலே, இரவோரன்னநிழலிற் 508
பொற்றூணில் 25
பொறிகெழு 194
பொறையிலா 64
பொன்பூச் 312
பொன்போலுங் 332
பொன்மகர 254
பொன்மலைநின்று 395
பொன்மாரிபெய்யினும் 314
பொன்மாரிபெய்யுமூர் 502
பொன்மூக்கழஞ்சால் 247
பொன்னம்பலக் 249
பொன்னம்பலஞ் 250
பொன்னலர் 403
பொன்னன்ன 148
பொன்னனை 9
பொன்னுருந் 461
பொன்னிதனிற் 437
பொன்னிநாட்டுப் 365

பொன்னிவள 188
பொன்னிறக் 444
பொன்னிறைந்த 122
பொன்னெடுஞ் 395
பொன்னெல்லை 266

போ

போதத்தமிழ் 393
போதார்நறும் 33
போதிகிழ 277
போதிகீழற் 57
போதியினீழற் 256
போதுசாந்தம் 33
போதுபோனது 276
போதுவிண்ட 36
போதுறமுக் 36
போந்தவுதாரணுக்குப் 92
போர்க்கடலாற் 101
போர்ப்படை 101
போர்மண்டலஞ் 433
போர்முந்து 313
போர்வாளை 91
போர்வேலின் 187
போரகத்துப் 135
போற்றினும் 85
போனபோன 370

ம

மகத்துதேசிகன் 457
மகபதி 420
மகரமெறி 292
மகிழ்ந்து 295
மங்கல 227
மங்கையொரு 342
மஞ்சின்மதி 497
மஞ்சுமஞ்சுங் 276
மட்டாரலங்கல் 218
மட்டாருஞ் 502
மட்டாருந் 401
மட்டியன்றேறிய 268
மட்டுத்தா 113
மட்டுப்படாக் 344
மடங்காமயி 126
மடலளவு 269
மடலேசொரி 282
மண்டங்குடி 429
மண்டபமு 254
மண்டமரட்ட 97
மண்டலத்துளோர் 468
மண்டித்தரு 32
மண்ணகன்று 153
மண்ணுடிகிரி 269
மண்ணுகொத்தற்கு 172
மண்ணுவொழ 437
மண்படுதோட் 112
மண்படுமோ 267
மண்பாய 240
மண்வாழும் 52
மணிதுணர்ந் 102
மணிநிறக் 385
மணியிலகு 57
மணியுமிழ்ந்து 25
மணிவிளங்கு 1
மத்தளைதயி 240
மதிசூடிய 411
மதிபாய்சடை 22
மதியாதார் 94
மதிவெயில் 397
மதுப்பொழி 140
மதுரமொழி 326
மதுரைநாயகன் 392
மந்தாரக்காம்பா 122
மந்தாகிலம் 45
மந்திரயூகி 309
மம்மர்விசும்பின் 111
மாகதச்சோதி 504
மாகதப்பூண் 118
மாத்தினை 504
மாபுதவிராதவன் 415
மருதமோரம்போதி 473
மருப்பூசியாக 113
மருவுபுகழ்க் 376
மருவறத்த 57
மல்லற்குல 251
மல்லனீர் 130
மல்லிவர்தோண் 331
மலயத்து 187
மலர்தலையுலகிற் 398
மலர்தலையுலகின்மல் 477
மலர்தலையுலகின்மாயிரு 480

மலர்ந்ததார் 239
மலர்மிசைத் 7
மலிதோரான் 499
மலிபுனல் 459
மலைதகர்ந்து 153
மலைந்தமன்னவர்கள் 236
மலையினலை 178
மலையினுங் 341
மலையுமலையு 26
மழுவாளான் 110
மழுவான்மிளை 110
மழைகூர் 145
மழைநுழைந்து 26
மழைமுகி 402
மழையார் 178
மற்கொண்ட 343
மற்பந்தமார்வன் 361
மற்றிவனை 151
மற்றுத்தொடர்ப்பா 79
மற்றொருப்பிலா 220
மறங்கெழுவே 155
மறந்தாங்கு 301
மறநாட்டுக் 108
மறனுடை 328
மறுத்தோன்ற 364
மறைப்பினை 481
மன்கவிதாவும் 377
மன்றலங் 327
மன்றுதிகழ் 252
மன்னதிகை 447
மன்னர்புகழ் 458
மன்னவொளிமுடி 189
மன்னவனு 345
மன்னன்குல 274
மன்னன்வழுதி 475
மன்னியசிறப்பின் 360
மன்னியநாண்மீன 10
மன்னுந்திருமலை 467
மன்னும்விசுவாவசு 464
மன்னுதிரு 362
மன்னுதிருவீரட் 254
மன்னுமதி 423
மன்னுயிர்காவல் 136
மன்னொளிசேர் 254
மனத்தால்வகுக்கவு 223
மனுப்புவிமேல் 122

மா

மாகத்தத்தும் 301
மாகுன்றனைய 264
மாங்காட்டு 363
மாசயிலத் 256
மாசிக்கட 253
மாடமதுரை 361
மாடமாளிகை 8
மாடில்லான் 92
மாணார்க்கடந்த 139
மாதர்க்கிதங் 84
மாதருமை 11
மாதவாபோதி 57
மாதாபிதாவும் 363
மாதாம்படி 293
மாந்தையிலே 244
மாநாக 115
மாப்பைந்தார்க் 226
மாமறையோர் 438
மாமுடும்பை 434
மாமுதுதாதை 107
மாயத்தார் 111
மாயவனாய் 141
மாயிருஞாலத்து 353
மாயிரும் 319
மாயோன்வடிவம் 471
மாரனுமென 382
மாரியொடு 501
மாலாக்கி 273
மாலைமணங் 507
மாலைமருவி 508
மாலையருளாது 130
மாலைவிலை 496
மாவடுவென்னு 505
மாவுறங்கின 134
மாவென்றுரைத்து 90
மாற்றருந்துப்பின் 98
மாற்றலர் 308
மாற்றுப்புலர் 106
மாறடுவோர் 138
மாறுமல் 419
மாறுகொண்ட 282
மாறுபடு 217
மாறேசெயு 290
மானபர 347

மானமருங் 22
மானமிக்க 240
மானவாமானவா 133

மி

மிக்கதனங் 58
மிக்கமாதவ 61
மிக்கவன் 336
மிக்கவிறை 432
மிசைசேர்ந்த 172
மிண்டாறை 306
மின்னார்தட 432
மின்னார்மணி 120
மின்னார்வடி 171
மின்னிருக்கச் 512
மின்னிலங்கு 254
மின்னுந்தமணியமும் 69
மின்னுமாளிகை 286

மீ

மீளாதுபெற்ற 148
மீளாவழி 211
மீனகம்பற்றிய 339
மீனவற்கு 217

மு

முக்காலுக் 19
முகவுரையிற் 481
முச்சக்கரமு 158
முட்டத்துப் 9
முடக்கால் 303
முடிக்குமருப்புக் 310
முடித்தலை 118
முத்தரும்பி 126
முத்தலைசிந்தும் 404
முத்திறத்தா 253
முத்தாரும் 501
முத்தெறியும் 325
முத்தொடுமணி 39
முதற்பதி 481
முதிரத்தமிழ் 368
முந்தவினையோன் 281
முப்பாலுமுண்டோ 471
முப்புரிநூன் 437
முரணில் 321
முரன்றசென்று 35
முருகவிழ் 37
முருகவேள் 23
முருகாறு 491
முருகுந்து 268
முருகுபொருகாறு 472
முலைகலிங்க 500
முலைபொழி 227
முழங்குகளி 48
முழங்குகுரன் 62
முள்ளிச்செழு 429
முற்குளம்பி 114
முற்பற்றினை 133
முற்றாண 103
முற்றருளார் 443
முற்றாதகாஞ்சியினு 284
முன்பொருபடைக் 269
முன்போம் 9
முன்றான் 55
முன்றான்முகிழ் 197
முன்னங்குடை 30
முன்னங்குழையவுங் 148
முன்னமொரு 454
முன்னாட்டுத் 388
முன்னாளறுபத்து 377
முன்னாளிந்திரன் 59
முன்னாளிருவர் 378
முன்னாளுறந்தை 307
முன்னூற்கு 399
முன்னைத்தஞ் 496
முன்னொருவன் 72
முனைப்புலத்துக் 127

மூ

மூட்டைகலம் 376
மூடர்முன் 83
மூதில்வாய்த் 117
மூவர்கோவையு 323
மூவர்தமிழ் 391
மூவருக்கு 306
மூவாத்தமிழ் 185
மூவிலைநெடு 28
மூவேந்தரு 296

மூன்றுகண்ணனுக்குச் 374
மூன்றுநான் 481

மெ

மெச்சுபுகழ் 371
மெய்கழுவிவந்து 261
மெய்ம்மலி 327
மெல்லிய 430
மெல்லியலாய் 197
மென்காசை 222

மே

மேகத்தான் 30
மேருநெடுவரை 172
மேவுமரும்பொரு 382
மேழித்தவசன் 490
மேழிபிடிக்குங் 91
மேருவின்மேல் 270
மேலதுவானத்து 103
மேற்குப்பவள 493
மேற்கோட்டு 125
மேற்செல்லுங் 101
மேனமக்கருளும் 78

மை

மைதண்ட 445
மைதானிலாத 195
மைந்தரொடேடி 496
மைப்புயல் 390
மைப்போதக 300
மைம்மிஞ்ச 123
மையணி 15
மையூருங்கண்ணார் 304

மொ

மொய்வேற்கையர் 103

மோ

மோட்டெருமை 342

யா

யாணர்வரவின் 74
யாமார்புகழ 261
யாமேபடுத்திட 100
யாவரேகாரானர் 335
யானவ்வை 326
யானூடத் 139
யானைநிரை 91
யானையிரத 59

ரா

ராமநாயகனை 297

வ

வகையெழிற் 90
வஞ்சிப்பூச் 238
வஞ்சியேனென் 158
வஞ்சிவெளிய 424, 494
வட்டவெண் 210
வடக்குத்திசை 491
வடக்குப்பெரும் 494
வடதிசைமருங்கின் 470
வடதிசையிருந்து 360
வடநூற்கடலுங் 463
வடநூற்கரசன் 486
வடமொழியில் 392
வடமொழியுங் 413
வடவேங்கடங் 469
வடவைக்கனலைப் 182, 279
வடித்தவேன் 249
வடிமலர்த்தார் 49
வடிவுடைநெடு 135
வடிவைத்தவே 218
வடுகொருவாளர் 94
வண்டடைந்த 4
வண்டணிகொண்ட 14
வண்டமிழை 424
வண்டிவரு 244
வண்ணந்திக 248
வண்ணமலர் 14
வண்புயலைக் 497
வண்மைமதம் 243
வந்தவுயிர் 314
வந்தீச்சுர 446
வயலுழவர் 91
வரக்கண்டு 132
வரகரிசிச் 233
வரமிகு 490
வரிக்கடை 78
வரிகொளரவு 17
வரிசைபெரி 425, 500

வரிவண்டு 515
வருக்கைநறவ் 127
வருககுடநாடன் 129
வருகோவைசூடி 486
வருடஞ்சாதாரணமா 466
வருபெருவேந்தற்கு 105
வருமறைநபல 16
வரைபொருளீண் 129
வரையறைசூழ் 149
வரையென 158
வரையேற 462
வல்லவனுரும் 407
வலம்புரிமுத்திற் 348
வழக்குடையார் 87
வழிமேல்விழி 304
வழுவிலெம் 136
வள்ளிகொண்டான் 312
வளங்கெழு 358
வளப்பாடிலாத 485
வளையவாய் 137
வளர்கொடி 509
வன்கண்மற 147
வன்மதுரை 267
வன்மீகநாதன் 399
வன்றிசைக்காளி 384

வா

வாக்கியல் 211
வாக்கிரண்டு 311
வாக்கிற்கருணைகிரி 424
வாக்கினன் 429
வாகைவனமாலை 109
வாசமலர்மடந்தை 332
வாசமானதென் 503
வாட்டாற 178
வாட்டானைத் 271
வாடாப்போதி 53
வாடைகுளிர 141
வாடைநலிய 149
வாணன்புகழ்க் 270
வாணன்புக 271
வாணனுரைத்திட 305
வாதவர்கோன் 324
வாதுசெய 436
வாதுவல்வயிறே 144
வாமான்றேர்க் 129
வாய்க்குன்குருகைத் 427
வாய்த்தபொருள் 18
வாய்த்தவயிர 331
வாய்ந்தபொருட் 331
வாய்மைவாழ் 119
வாய்வாட் 121
வாயிற்கிடங் 108
வார்பணிய 135
வார்பெறுங் 417
வாரணங்க 363
வாரணமாங் 313
வாரம்புலர் 504
வாரிவளஞ் 255
வாரொன்று 269
வாவிகணை 502
வாவியபொற் 289
வாழ்கோயில் 210
வாழிதிருப்பாவை 430
வாழிபர 429
வாழிமழை 471
வாழியதடிய 143
வாழியுலகாசிரியன் 433
வாழுமிலங்கைக் 288
வாழொப்பிலாதவன் 289
வான்வலம் 95
வான்வலம் 98
வானமர்வீழ் 149
வானரவின் 16
வானுடைய 252
வான்குணத்தெம் 151
வான்குருவி 83
வான்சொல்லுமே 8
வான்பொய்யாது 190
வான்வளஞ் 345
வான்றறக்கம் 117
வான்றோய் 111
வானத்தருவின் 255
வானவர்கடாழ்ந்து 3
வானவர்போரிற் 154
வானுமிமண்ணாய் 3
வானுமேம்பரி 58
வானிற்கு 127
வானுடையான் 195
வானுறமதி 230
வானோர்தொழ 47

வி

விக்காவுக்கா	20
விச்சாதரனேனு	181
விசயகரத்து	308
விடஞ்சூழரவி	234
விண்கூடலசங்கமத்	171
விண்டார்பட	196
விண்ணசை இ	101
விண்ணவர்காயகன்	58
விண்ணவரின்	511
விண்ணுடர்	224
விண்ணின்மேற்	120
விண்ணீரும்	308
விண்ணுக்கடங்காமல்	367
விண்ணுக்கு	301
வித்தகர்செய்த	75
விதிதரு	411
விதியினரசிழந்த	381
வியமெல்லாம்	474
வியன்ஞாலஞ்	511
விரகரிருவர்	85
விரகன்முத்	387
விரிகடல்சூழ்	3
விரிதருபைங்	445
விரிந்தமதி	509
விரும்பியரு	355
விரைத்தாரலங்கற்	354
வில்லம்பு	345
வில்லவன்ருனே	195
வில்லார்பொதுச்	451
வில்வில்வெயி	254
வில்லுடையான்	157
விழுந்ததுளி	332
விளம்பியசகர	490
விளேவாய	57
வினேத்திண்பகை	47
வினேபலவலி	61
வினையைத்தான்	36

வீ

வீங்குகட	318
வீங்குசெலற்	148
வீதிருழ்கல்	251
வீரத்தால்	171
வீரியத்தால்	191
வீறுசான்	111

வெ

வெங்கட்பொருகயல்	233
வெங்கண்சிவந்து	345
வெங்கண்மத	218
வெங்காவுண்ட	439
வெங்கைப்பதிப்	455
வெங்கைப்பழமலேயார்	449
வெஞ்சினவேந்த	109
வெட்சிநிரை	95
வெண்டாமரை	407
வெண்ணீர்மை	120
வெண்ணேயும்பார்த்	372
வெண்பலிச்	127
வெண்பா	93
வெண்பாவிற்	424
வெய்தாய்	323
வெய்யகுரற்	72
வெய்யோனெழா	111
வெருவரு	118
வெவ்வாண்	97
வெள்ளத்தடங்காச்	134
வெள்ளமறவி	76
வெள்ளாண்மரபுக்கு	474
வெள்ளாறது	493
வெள்ளிலேவே	71
வெள்ளேக்கலே	30
வெள்ளேப்பரி	434
வெற்றிப்பாடேங்	377
வெற்றிபுனே	230, 271
வெறிக்குங்குமக்	220
வெறிகமழ்	327
வெறிபுறுகமழ்	65
வெறிவிரவு	19
வெறும்புற்கையு	266
வென்றிபெற	105
வென்றிவளவன்	185
வென்றுகளங்	118

வே

வேங்கடங்	315
வேங்கைவன	248

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
*8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

செந்தமிழ்ப்பிரசுரம்.

*1.	ஐந்திணையைம்பது உரையுடன்	0	3	0
2.	கணுநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
*7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)			
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
*9.	அநுமானவிளக்கம்			
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.*	பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	2	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.*	திருக்கலம்பகம் (ஷை)			
24.	குருமொழிவிளைவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
28.*	சந்திராலோகம்			
30.	ஞானமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0

32.	மனீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	அகப்பொருள்விளக்கம்	1	4	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	பழமொழி மூலமும் பழையஉரையும்(முதல் 100 செய்)	1	0	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ்	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	கடைவள்ளலார்காலம்	0	6	0
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	மதங்கசூளாமணி	1	0	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர்	0	6	0
	ஷை ஆங்கிலத்தில்	0	6	0
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு ...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0

மேலேகண்ட சங்கப்பதிப்பில்லாத புத்தகங்கள் வேண்டுவோர் வேறு புத்தகசாலைகளுக்குத் தாங்களே நேரில் எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச் " செந்தமிழ் "ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 30 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப் பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

T. S. P. P. MADURA-34

லக்ஷ்மிநாராயணையர், மானேஜர்.